# எழுத்தாணி

பல்சுவை இதழ்

மே இதழ்-03 2012

கண்கொண்டு பாராயோ கீரிமலை நாதனே..!

யுத்தம் தந்த மனயுத்தம்



பாம்பென்றால் படையும் நடுங்கும்

## எப்போது விடியும் எம் வாழ்வு..?

### நாகர்கோவில் கிழக்கில் மீள்குடியேறிய மக்களின் அவலங்கள் ஒரு பதிவு..



ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## வளமான இதழியல் துறைக்கு கட்டியம் கூறும் 'இதழியல் கல்வி'

தமிழ் இதழியல் துறை தமிழ் துறைசார்ந்தோரின் ஆர்வ மேலீட்டில் துளிர் விட்டதென்று கூறலாம். அச்சியந்திரங்களின் வருகையால் நூல்கள் அச்சடிக்கும் பண்பாடு ஆரம்பமாகி பின்னர் பத்திரிகை அச்சடிக்கும் பண்பாட்டை உருவாக்கிக் கொள்கிறது.

ஈழத்தில் நாவலர் பெருமானின் பிழையின்றி அச்சடித்து நூல் வெளியிடுதல் என்ற எண்ணமும் அதனை கனகச்சிதமாக அவர் செய்து காட்டியதும் வியப்போடு மீள நிலைத்திட வைக்கிறது. ஈழத்தில் பத்திரிகை வரலாறு மிக முக்கியமானதாக இருக்கிறது. சமய நிறுவனங்கள் வெளியிட்ட பத்திரிகைகள் ,அரசியல் ,சித்தாந்தம் சார்ந்த பத்திரிகைகள் என்று உருவாகி அவை பின்னர் இன அடையாளமாக கொள்ளப்பட்டு இனத்தின் குரலாக வளர்ந்திருப்பதை எமது இதழியல் வரலாற்றில் காண்கின்றோம்.

இந்த பாரம்பரியத்தில் நாம் இதழியலில் கற்றறிந்த அறிவுப்புலம் சாராத அதே வேளை மொழி சார்ந்த புலமை மற்றும் ஆர்வ மேலீடு காரணமாகவே பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதனை ஈழநாடு பத்திரிகை வரலாறு எமக்கு நன்கு புலப்படுத்துகிறது. பட்டறிந்த அனுபவமே ஈழத்தின் தமிழ் பத்திரிகை உலகை வழி நடத்திச் சென்றுள்ளது. இந்த பின்புலம் கடந்த பத்தாண்டுகளில் மாற்றமடைந்திருக்கிறது. இதழியல் கல்வியாக வளர்ந்திருக்கின்ற ஒரு துறை என்ற அடிப்படையில் இதழியலை கற்றுத் தேர்ந்து பணி செய்ய வேண்டும் என்ற எண்ணக்கரு வளர்ந்திருக்கிறது.

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் அங்கத்தவர்களான மூத்த பத்திரிகையாளர்கள் இதழியல் துறையை கற்பிப்பதற்கான ஒரு மையத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை தொன்னூறுகளின் இறுதியில் முன்வைக்கிறார்கள். இது வரலாற்றின் முக்கியமானதான ஒரு சிந்தனை மாற்றம். உலகத்தின் இதழியல் போக்குகளை புரிந்து கொள்ளுதல் நவீன தொழில் நுட்பங்களை இனங்கண்டு கொள்ளுதல் அடைபட்டுக்கிடத்த அல்லது மட்டுப்படுத்தப்பட்டு கிடந்த ஒரு உலகத்துக்குள் இருந்து விடுபட்டு பரந்து பட்ட உலக வெளிக்குள் சஞ்சரித்தல் போன்றதான எண்ணங்களோடு இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவே பார்க்க வேண்டும்.

இந்த எண்ணத்துக்கு வாய்ப்பையும் அனுசரணையையும் வழங்க யுனெஸ்கோ நிறுவனம் 2002ம் ஆண்டு முன்வருகின்றது. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் அதனை நிறைவேற்றுவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றது. இதன் பேறாக ஊடக வளங்கள் பயிற்சி மையம் உருவாக்கப்படுகிறது. இதன் முதற்பணியாக பத்திரிகைத்துறையில் பட்டறிவுள்ளவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது.

இதன்பின்னர் 2006ம் ஆண்டு தொடக்கம் இதழியல் துறையில் புதிய ஆளணியினரை உருவாக்கும் நோக்கத்தோடு முழு நேர டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் ஒரு பாடமாக இதழியல் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் விஷேட பட்டப்படிப்பு கல்வியாக பரிணமித்துள்ளது. தற்போது இலங்கையில் முதல்முறையாக தமிழில் ஊடகக் கற்கைளில் கலைமாணி பட்டம் பெற்றவர்கள் 2013ம் ஆண்டு வெவளியேறவுள்ளார்கள். இப்போது ஈழத்து இதழியல் துறையில் இலங்கையில் பட்டம் பெற்றவர்கள் இணைந்து கொள்வார்கள் .இதே வேளை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட டிப்ளோமா பயிற்சி நெறி 2011ம் அண்டில் இருந்து முழு நேர இரண்டாண்டு பயிற்சியாக மாற்றப்பட்டு நடத்தப்படுகிறது. இதில் முதலாம் இரண்டாமாண்டு அடங்கலாக ஐம்பது மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் .இவர்கள் 2012ம் ஆண்டிலிருந்து டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள். இந்த ஆளனி எதிர்காலத்தில் தமிழ் இதழியல் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துமென்று நம்பலாம். இந்த மாணவர் படைப்பு இதற்கான கட்டியம் கூறலாக அமைகிறது.


தே.தேவானந்த்,M.A,M.Sc.
இயக்குனர்,
ஊடக வளங்கள் பயிற்சி மையம்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

# எழுத்தாணி

இதழ் – 03

யாழ் பல்கலைக்கழக ஊடக மைய மாணவர்களின் பயிற்சி இதழ்

**ஆசிரியர் குழு**
நே.நிருசாந்த்
ச.ஹம்ஷா
மு.கௌசிகா
மு.சுகந்தி

**நிர்வாக ஆசிரியர்**
தே. தேவானந்த்

**ஆலோசனைக்குழு**
ஆ.சபேஸ்வரன்

**பக்க வடிவமைப்பு**
நே. நிருசாந்த்

**ஆக்கங்கள்**
நே.நிருசாந்த்
ச.ஹம்ஷா
மு.கௌசிகா
மு.சுகந்தி
அ.றஜீவன்
கலியுகன்

**வெளியீடு**

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாண பல்கலைக்கழக
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜீம்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212229873
Email: directormrtc@gmail.com

## உள்ளே...

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | கண்கொண்டு பாராயோ கீரிமலை நாதனே..! | 1–2 |
| 2. | எப்போது எம் வாழ்வு விடியும்..? | 3–4 |
| 3. | எம்மை கண்டுகொள்வார் யாரும் இல்லை... | 5–6 |
| 4. | சொந்த இடம் நோக்கி... | 7–8 |
| 5. | ரணங்கள் ஆறியும் மாறாத வடுக்கள் | 9–10 |
| 6. | யுத்தம் தந்த மனயுத்தம் | 11 |
| 7. | மரணத்தை தேடிச் செல்லும் உயிர்கள் | 12 |
| 8. | பேசாத உடல்களுக்காக பேசும் ஊடகங்கள் | 13–14 |
| 9. | ஒரு பேனாவை வீழ்த்த துப்பாக்கிகள் எழுந்தன | 15–16 |
| 10. | மௌன வலிகள் | 17–18 |
| 11. | யுத்தம் ஏற்படுத்திய வடுக்கள் | 19–20 |
| 12. | பாம்பென்றால் படையும் நடுங்கும் | 21–22 |
| 13. | மாறி வரும் உலகும் மாறாத மனிதர்களும் | 23–24 |
| 14. | சென்னையின் மறுபக்கம்... | 25 |
| 15. | இனியென்ன தனிமை! | 26 |
| 16. | மறைந்து போகும் கையின் கலை வண்ணம் அழிவடையாமல் காப்பது எப்படி..? | 27–28 |


# கண்கொண்டு பாராயோ கீரிமலை நாதனே..!

## மீளக் குடியமர்ந்த கீரிமலை மக்களின் அவலம் ஒரு பார்வை



யுத்தம் தந்த காயங்களை நெஞ்சின் உள்ளே புதைத்து விட்டு தம் தாய் நிலத்தில் நீண்ட காலத்தின் பின் மீளக்குடியமர்ந்திருக்கின்றார்கள் கீரிமலை நகுலேஸ்வர பிரதேச மக்கள்.

பற்றைக் காணிகளின் அருகே அமைந்திருக்கின்றன இவர்களது குடியிருப்புக்கள். குடியிருப்பதற்கு பெரும் பாலான மக்கள்  இன்னமும் வராத காரணத்தால் பற்றைக்காடுகளாக காணிகள் இருக்கின்றன. குடியிருக்க வந்தவர்களுக்கு தத்தம் காணிகளை துப்பரவு செய்வதற்கே நேரமிருக்கின்றது. நடை பாதையில் இடையிடையே ஊர்ந்து செல்கின்றன மரநாய்கள்.




மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகளை  பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அந்த வசதிகள் இப்பிரதேச மக்களுக்கு கிடைத்து வருகிறது. மீள்குடியமர்ந்தவுடன் உலக உணவுத் திட்டத்தினூடாக (WFP) Cash voucher for food project நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு குடும்பத்திலுள்ள அங்கத்தவர் ஒருவருக்கு 1179/= வீதம் பொருட் களை கொள்வனவு செய்யலாம். இக்கொடுப்பனவு ஆறுமாத காலப்பகுதிக்குள் மட்டுமே வழங்கப் படுகின்றது.



"என்ர மகளுக்கு ரெண்டு பிள்ளைகள். புருசன் விட்டிட்டுப் போட்டார். மகன் தான் குடும்பத்தை பார்க்கிறவன். ஆறுமாதம் ஒரு வவுச்சருக்கு சாமான் எடுத்தனாங்கள். இப்ப தாறேல்லை. சாப்பாட்டுக்கு சரியான கஷ்ரமாத்தான் இருக்கு" என்கிறார் இப்பிர தேசத்தில் குடியமர்ந்திருக்கும் 53வயதான சந்திரன் ஈஸ்வரி.

இக்குடும்பத்திற்கு மலசலகூடம் அமைப்பதற்கான உதவியை சேவாலங்கா மற்றும் சமுர்த்தி இணைந்து வழங்கியிருக்கின்றன. பிள்ளைகள் படிப்பதற்காக மின்சாரமும் தேவையாக இருக்கின்றது. இவர்களது வசதிக்காக இலவச வகுப்பும் நடாத்தப்படுகின்றது.




124 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்திருக்கின்றன. பெரும்பாலும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களே இருக்கின்றன. ஆடு,மாடு என்பன வளர்ப்பிற்காக வழங்கப்பட்டு இருக்கின்றன. எனினும் சுயதொழில் வாய்ப்புக்கள் இங்கு காணப்படவில்லை.

நிவாரணக் கொடுப்பனவு ஒருவனை சோம்பேறியாக்கும் என உலக உணவுத்திட்டத்தின் இலக்கு ஏற்கக் கூடியதாக இருந்தாலும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலைமை தகுந்ததல்ல. இவர்களது வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதற்கான கதவு என்று அமைக்கப்படுமோ தெரியவில்லை.

இருட்டுக்குள் வாழும் இவர்களுக்கு வாழ்வில் ஒளி ஏற்பட வேண்டும். இன்றே இவர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப் படவில்லையாயின் எதிரகாலத்தில் கண்ணீரோடான வாழ்க்கையை தவிர இவர்களிடம் வேறு எதுவும் எஞ்சியிருக்காது. இதனால் இச்சமூகத்திற்கு ஏற்படும் இழப்புக்கள் ஏராளம். போனகாலம் திரும்பாது வருங்காலத்தையாவது சுபீட்சமாக மாற்ற வேண்டும். சமூகம் அம்மக்களை கண்டு கொள்ளாது இருப்பதுது வருத்தத்திற்குரியதே.

இங்கு வாழும் மக்களது வாழ்விலும் விடியல் ஒன்று வராதா? சமூகம் மனம் வைத்து செயற்பட்டால் வெற்றி வராமல் போய்விடுமா?
இங்கு வாழும் சிறார்களின் வாழ்வை உதயமாக்க அனைவரும் கைகோர்க்க வேண்டும்........



மு.கௌசிகா

வாழ்வாதாரத்தினை மேற்கொள்வதற்காக தொழில் உபகரணங்கள் வழங்கப்படவில்லை. இங்கு பெருமள வில் கூலித்தொழிலையே மக்கள் நம்பி இருக்கின்றனர் இந்நிலையில் உணவுக் கொடுப்பனவுகளும் வழங்கப் படுவதில்லை.

38 வயதான திரவியநாதன் புஸ்பா என்பவருக்கு ஐந்து பிள்ளைகள். மூன்று பிள்ளைகள் படிக்கின்றார்கள். இருவர் கூலிவேலை செய்கிறார்கள். "என்ர புருசனுக்கு அறுபது வயசாகுது. அவரால வேலை வேலைக்கு போகேலாது. இப்ப நிவார ணமும் இல்லை. எங்கட பிழைப்பு ஏதோ ஓடுது" என்கிறார். இவருக்கு ஒரு லட்சம் பெறுமதியான தற்காலிக வீடு அமைக்கப் பட்டிருக்கின்றது.



மீளக்குடியமரும் எல்லோருக்கும் ஆறுமாத காலத்திற்குரிய உணவுக் கொடுப்பனவு voucher வழங்கப் படுகின்றது. அதன்பின்னர் அவர்களது வாழ்வாதாரம் அவர்களது கையிலேயே இருக்கின்றது என்கிறார்.
இப்பிரதேச கிராமசேவையாளர் தம்பி நாயகம் நாகசுபதினி (கிராமசேவை யாளர் பிரிவு(J/226 ).
தொடர்ந்து நிவாரணம் கொடுத்தால் மக்கள் வேலைக்கு போக மாட்டார்கள்.
அவர்களை மன ரீதி யாகவும் உடல்ரீதியாகவும் பலப்படுத்துவதே உலக உணவுத்திட்டத்தின் நோக்காகும்.

ஆரம்பத்தில் 94 குடும்பங் களைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியேறினர். தற்போது

படாத
கஷ்ரமெல்லாம்
பட்டு வந்தோம்
காணாத
இடமெல்லாம்
கண்டு வந்தோம்
சொந்த நிலம்
வந்தும்
வாழ்கிறோமா? 'இல்லை
இன்னமும் கண்திறக்க
கீரிமலையானுக்கு
மனம் வரலையோ...?



கடந்த 30 ஆண்டுகாலமாக இடம் பெற்ற போரினால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலை காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த பெரும்பாலான மக்கள் தமது சொந்த நிலம் பற்றிய ஏக்கத்துடனேயே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சொந்த நிலங்களில் இருந்து 1995ம் ஆண்டு வெளியேற் றப்பட்ட மக்கள் 16 வருடங்களின் பின்னர் தற்போது தான் பல சவால்களுக்கு மத்தியில் மீள்குடியேற்றப்பட் டுள்ளனர். 756பேரைக் கொண்ட 217 குடும்பங்கள் எந்தவித அடிப்படைவசதிகளும் அற்ற நிலையில் இங்கு மீள் குடியேற்றப்பட்டுள்ளதை அம்மக்களை நேரில் சென்று பார்வையிட்டு அவர்களிடம் செவ்வி கண்டதன் மூலம் தெரிந்து கொண்டோம். இம் மக்களுக்கு இதுவரை இருப் பதற்கேற்ற வீடுகள் அமைப் பதற்கான வசதிகள் கூட செய்து கொடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது. எங்கு



பார்த்தாலும் யுத்த வடுக்கள்............
பதுங்கு குழிகள், பற்றைகள், மிதிவெடி அபாயச்சின்னங்கள், பாழடைந்த கிணறுகள் என பாதிப்புக்களையே உணர முடிந்தது. கல் வீடுகளை காண் பது அரிதாகவே இருந்தது. அப்பிரதேச வீடுகள் யாவும் கொட்டில்களாக காணப்பட, ஆங்காங்கே ஒருசில தற்காலிகவீடுகள் மட்டுமே தெரிந்தன.

# எப்போது எம் வாழ்வு விடியும்..?

## நாகர் கோவில் கிழக்கில் மீள் குடியேறிய மக்களின் வெளிப்பாடு

யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது தான் பெரும்பாலான பிரதேசங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் மீள்குடியேற்றங்கள் சர்வதேசம் இலங்கை அரசு மீது கொடுக்கும் அழுத்தங்களை தணிப்பதற்கே இடம்பெற்று வருகின்றது. சொந்த மண்ணுக்கு செல்லும் ஏக்கங்களோடு அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கிழக்கு J/423 ஐ கிராமசேவகர் பிரிவாக கொண்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டபோது, இப்பகுதி கரையோர பிரதேசமாக அமைந்துள்ளதால் பிர தேசத்தின் பெரும்பகுதி உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்ததால் போரின் போது மிக மோச மான அழிவுகளை சந்தித்திருப்பதை காணமுடிந்தது.

இங்குள்ள மக்களின் நிலைபற்றி அறிய அப்பிரதேச வாசியான மனோன்மணி என்பவரை சந்தித்து செவ்விகண்ட போது அவர் உண்ண உணவின்றி உடுத்த உடை இன்றி இருக்க இடம் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற இதுவா மீள்குடியேற்றம்!

கஷ்ரப்பட்டு கட்டின கல்வீடுகளை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஆக்கிப்புட்டு இப்ப தகரகொட்டில்கள் கட்டித் தருகினமாம். இதில எப்படி வாழுறது சொல்லுங்க..?" அது மட்டுமா றோட்டில இருந்து 500 மீற்றர்க்கு உட்பட்ட பகுதியே இது வரைக்கும் மிதிவெடி அகற்றப்பட்டிருக்கு. அங்கால பத்து அடி வைத்தாலும் கால் போய்டும் சின்னப் பிள்ளையல வைச்சிட்டு எப்பிடி இங்க இருக்கிறது என எம் மிடம் கேட்டவாறு அவசர அவசரமாக எங்கோ புறப்படத் தயாரானார்.







இருப்பது எப்படி.
புனர் நிர்மானம் செய்து
தந்தால் உதவியாக இருக்கும்"
என்றார்.

**பத்திரிகைகளில் பக்கம்
பக்கமாக
மீள்குடியேற்றம் –பற்றி
எழுதிக்
கொண்டிருக்கிறார்கள் –
ஆனால்
அவர்களின் பார்வைகூட
நம் – பக்கம்
திரும்பவில்லையே.......**

என்று மனவேதனையோடு கூறினார்.

அவரிடம் பேச்சைத் தொடர்ந்த நாம் எங்க போகப் போறியள் அவசரமா வெளிக்கிடுறியள் என கேட்ட போது, "தம்பி இங்க வந்ததுக்கு நேற்றுத்தான் நிவாரண முத்திரை தந்திருக்கிறாங்க இப்ப போனால் தான் அரிசி சாமான் வாங்கிட்டு வந்து இண்டைக்கு மத்தியானத்துக் காவது சோறு சமைக்கலாம்" என்று கூறியபடியே புறப் பட்டார்.

அவரை பின் தொடர்ந்த நாம் அங்கு சென்று பார்த்த போதுதான் தெரிந்தது. மனோன்மணியின் குடும்பம் மட்டும் அல்ல அங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் அந்த நிவாரண அரிசிக்காய்த்தான் காத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று.
இவர்களின் துன்பநிலையை என்னவென்று சொல்வது....!

அவரை தொடர்ந்து அமரதாசன் விமலதாசா என்பவரை செவ்வி கண்ட போது அவர்,"தம்பி மீள்குடியேற்றம் இடம் பெற்று இவ்வளவு நாள் ஆகியும் அடிப்படை வசதிகள் கூட எமக்கு செய்துதர யாரும் முன்வரவில்லை. சாப்பிடாமல் கூட இருந்து விடலாம். குடிக்க தண்ணி கூட இல்லாமல்



இவ்வாறாக போருக்கு பின்னரான இவர்களின் அவலங்கள் என்னவென்று சொல்வது. இவர்களின் இன்னல்கள் எப் போது தான் தீர்க்கப்படப் போகிறதோ? மீள்குடியேற்ற கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார தேவைகள் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக குறிப்பிட்ட பொழுதும் இன்றுவரை இவர்களின் வாழ்வில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது இவர்களில் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.



இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகளில் அதிகளவான அக்கறையுடன் செயற்பட வேண்டிய சூழ்நிலையில் காணப்படுவதையும் உணர முடிந்தது. வார்த்தைகளால் சொல்ல முடியாத பேரவலத்தில் இருப்பவர் பற்றி எத்தனை வரிகளாலும் தாள்களில் நிரப்பி விடமுடியாது போருக்கு பின்னரான அவலம் போரைவிட மிக கொடுமை யானது என்பதையே இவ் மீள்குடியேற்றங்கள் புலப்படுத்தி நிற்கின்றது.

நே.நிருசாந்த் 



எங்க வீட்டுக்கு எப்ப விடுவினம்? என்று எதிர் பார்த்து அங்கலாய்த்துக் காத்துக் கொண்டிருந்த வலிவடக்கு மக்களின் முகங்கள் கறுத்துவிட்டன. சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து கடந்த இரண்டு தசாப்தமாக முகாம்களிலும் உறவினர் நண்பர் வீடுகளிலும் வாழ்ந்த மக்கள் மன உளைச்சல்களுக்கும் மனவேதனைகளுக்கும் உள்ளாகினார்கள்.

இது தவிர பொருளாதார ரீதியிலும் பல இன்னல் களையும் இடர்பாடுகளை யும் எதிர்நோக்கினார்கள் நிவாரண உணவுப் பொருட் களை நம்பியவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். சொந்த இடங்களில் தமது மீன்பிடி விவசாயம் கைத்தொழில் என அனைத்து வசதிகளையுமே இழந்து எதுவுமற்ற எதிலிகளாக அந்தரித்து நின்றார்கள்.

ஒருகாலத்தில் வலிவடக்கில் பெரும் பகுதி விவசாய நிலங்களால் சூழப் பெற்றது. யாழ்ப்பாணத்தின் விவசாய உற்பத்தியின் பெரும் பகுதியினை வலிவடக்கு விவசாயிகளே நிறைவு செய்து வந்தனர். அதேபோன்று தான் கடற்றொழிலிலும்

# எம்மை கண்டுகொள்வார் யாரும் இல்லை...

## ( மீள் குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி என்பது கானல் நீரா? )



இப்பகுதி கரையோரங்களில் வசித்த பெரும் எண்ணிக்கை யான மீனவர்களினால் குடாநாட்டின் கடல் உணவு தேவைகளின் ஒருபகுதி பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் வலிவடக்கு மக்களின் இடப்பெயர்வின் பின் இந்த நிலைமைகள் அனைத்தும் அடியோடு அற்றுப் போய் விட்டன. இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வும் பின்னடைந்து விட்டது.

யுத்தம் முடிவடைந்து நாட்டில் ஒரு அமைதியான சூழ் நிலையில் அவர்கள் தம் பழைய நிலைக்கு கொண்டுவர எடுத்த முயற்சியின் ஆரம்பக்கட்டமே சொந்த இடங்களில் மீள்குடியேறும் நாளுக்கான எதிர்பார்ப்பு.

# காலம் தந்த- எமது
# காயங்கள்
# கரைந்து போக
# கனிவான ஓர் எதிர்காலம்
# எமக்கு கிடைக்குமா???



என்ற ஏக்கத்துடன் கடந்த ஆண்டு மீள்குடியேற்றப் பட்டனர். இருந்தும் என்ன பயன் மீள்குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி என்பது கானல் நீராகவே இருக்கின்றது. மீன்குடியேற்றத்தின் போது வாக்குறுதிகள் பல கொடுக்கப்பட்டன. ஆனால் அவற்றில் எவையுமே . இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. அவர்களுக்கான அடிப்படை வசதிகள் கூட செய்து தரப்படவில்லை. "எந்தவித அடிப்படை வசதிகளும் உரியமுறையில் செய்து தராமல் மீன்குடியேற்றம் என்ற போர்வையில் அநாதரவாக விடப்பட்டுள்ளோம். எம்மை கண்டுகொள்வார் யாரும் இல்லை" என கண்ணீருடன் தெரிவித்தனர். வலிவடக்கு தெல்லிப்பழை பிரதேசமக்கள். அப்பிரதேசவாசியான நவாலி புலவர் முகாமில் இத்தனை காலமும் வசித்து வந்த இரண்டுபிள்ளைகளின் தாயான சச்சிதானந்தம் தீபா(வயது31) குறிப்பிடுகையில், "குடிநீர்வசதி, மலசலகூடவசதி, இருப்பிட வசதி போன்ற அடிப்படைவசதிகள் கூட செய்து தராததால் நாம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை கண்கூடாக பார்த்தால் கூட புரியாது அனுபவித்தால் மட்டுமே புரியும்" என்று என்று வேதனையோடு தெரிவித்தார்.

"இப்பிரதேசத்தை சேர்ந்த மக்களில் இன்னமும் பலர் தற் போதும் நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்கிறார்கள். அடிப்படை வசதிகளையேனும் முழுமையாக பூர்த்தி செய்து தந்தால் அவர்களும் தமது சொந்த நிலங்களில் வாழத் தயாராக இருக்கிறார்கள்" என வரதராசா என்பவர் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கூறிய பொழுதும் அவர்களின் வாழ்வில் மீள்குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி என்பது வெறும் கானல் நீரோ என்ற நிலையிலேயே உள்ளது.

எஸ்.ஹம்ஷா







# சொந்த இடம் நோக்கி...

வானத்தில் மேகக்கூட்டங்கள் ஓடி ஒழியுமே அவ்வாறு மழலைக் கூட்டமும் எம்மைக் கண்டவுடன் வெட்கப்பட்டு பதுங்கியன. சிநேகமாக புன்னகைத்ததுடன் அதிபர் எங்கே என வினாவிய போது, "அக்கா எங்கட அதிபர் அந்த வகுப்பில் இருக்கிறார்" என்று ஆர்வமாக கூறிவிட்டு துள்ளிக்குதித்தபடி ஓடினாள் ஒரு மாணவி.

யாழ் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம். இருகட்டிடங்களை பெருமையுடன் தாங்கி நிற்கின்றது.

இப்பாடசாலை அதிபரான சு.ஸ்ரீகுமரன் அவர்களை நேரில் சந்தித்து பாடசாலை செயற்பாடுகள் குறித்து பேசினோம்.
அவருடனான நேர்காணலின் போது!

கேள்வி- நீண்ட காலத்தின் பின்னர் நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் தனது சொந்த இடத்தில் தற்போது இயங்குகின்றது. இங்கு நிலைமை எவ்வாறு உள்ளது?

பதில்- மிகவும் சந்தோசமாக உள்ளது. ஆரம்பத்தில் வந்தபோது கட்டிடங்கள் எதுவும் இல்லை. பற்றைக்காடாகவே எங்கும் காட்சியளித்தது. மிகவும் சிரமத்தின் மத்தியில் மக்கள் உதவியுடன் விரைவாக துப்பரவு செய்து பாடசாலை பழைய கட்டிடங்கள் முற்றாக அழிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு மீண்டும் தனது சொந்த இடம் நோக்கி தனது சேவையை ஆரம்பித்தது.



சு.ஸ்ரீகுமரன்
(யா/கீரிமலை நகுலேஸ்லர மகா வித்தியாலயம்)

கேள்வி- பாடசாலை எவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டது?

பதில்- பாடசாலையானது மீள்எழுச்சித்திட்டத்தின் கீழ் சேவாலங்கா நிறுவத்தின் உதவியுடன் 72 லட்சம் பெறுமதியான 2கட்டிடத் தொகுதிகளும்மற்றும் கிணறு, மலசலகூடங்கள் என்பன அமைக்கப்பட்டன.

கேள்வி- பாடசாலை எப்போது மீண்டும் சொந்த இடத்தில் இயங்கியது?

பதில்- 2012ஆண்டு தை மாதம் 2திகதி தனது பழைய இடத்தில் புதிய கட்டிங்களுடன் புத்துயிர் பெற்றது.

கேள்வி- பாடசாலை மாணவர்கள் வரவு எந்த மட்டத்தில் இருக்கின்றது?

பதில்- மாணவர்கள் வரவு மிகவும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கின்றது.அதற்கு குடும்பப்பிரச்சனையே காரணமாக உள்ளது. பெரும்பாலும் குடும்பத்தை பெண்கள் தலைமை வகிப்பதால் பாடசாலைக்கு மாணவர்கள் வரவு பெரிதும் பாதிக்கின்றது. யுத்தநிலையில் பாதிக்கப்பட்டு மோசமான நிலையில் வந்தவர்களும் இருக்கிறார்கள். வேறு இடங்களில் வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள் மாணவர்களுக்கு மனரீதியான ஆதரவு மிகவும் தேவை ஆனால் குடும்ப சூழல் அதற்கு இடம் கொடுக்காது என்று நான் கருதுகின்றேன்.

கேள்வி– பாடசாலையில் மாணவர்களுக்கு உதவிகள் ஏதும் வழங்கப்படுகின்றதா?

பதில்– பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு தற்போது வழங்கப்படுகின்றது. வரும் திங்கள் கிழமை முதல் பால் வழங்கப்பட உள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தின் உதவியுடன் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப் பட்டன.

கேள்வி– இடம்பெயர்ந்த போது பாடசாலை எங்கெங்கு இயங்கி வந்தது?

பதில்–
- 15.06.90 இளவாலை அன்னை வேளாங் கன்னி ஆலயம்
- 5.12.1990களில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
- 15.07.1991களில் சிறுவிளான் கனகசபை வித்தியாலயம்
- 24.06.1992 அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
- 07.09.01992 உடுவில் மானஸ் மகா வித்தியாலயம்
- 28.03.1994 சீரணி சண்டிலிப்பாய் தனி வீடு
- 01.02.1996 வரணி மகா வித்தியாலயம்
- 1.2.1996 சீரணி சண்டிலிப்பாய் தனி வீடு
- 10.1.2005 சண்டிலப்பாய் தனி வீடு

போன்ற பல்வேறு இடங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் இயங்கியன.

கேள்வி– பாடசாலை மாணவர் களுக்கான கற்றல் வசதிகள் எவ்வாறு காணப்படுகின்றன?

பதில்– பாடசாலையின் ஆரம்பத்தில் 83 மாணவர்களுடன் பாட சாலை ஆரம்பிக்கப்பட்டது. தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை மாணவர்கள் கல்வி கற் கின்றனர். தற்போதைய மாணவர் தொகை 137 காணப்படுகின்றது.


கேள்வி– பாடசாலையின் எதிர்கால திட்டம் பற்றி?

பதில்– பாடசாலையில் சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம்,நூலகம், போன்றவற்றை அமைக்க திட்டமிட்டு இருப்பதாக தெரிவித்தார்.


மீள் குடியேறிய போது இருந்ததைவிட மிகவும் விரைவாக பாடசாலை மாணவர்களுக்கு எமது சேவைகளை வழங்குகின்றேன்.

மீள்குடியேறிய மக்களைப் போன்று இப் பாடசாலையும் பாரிய மாற்றங்களை எதிர்நோக்கி இருக்கின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் எத்தனையோ கட்டிடங்களை கட்டினாலும் பாடசாலை எனும் இமாலயத்திற்கு ஈடில்லை.

ஆயிரம் சிறைச்சாலைகள் அமைக்கப்படுவதை விட ஒரு பாடசாலை அமைத்தல் சிறந்தது.



மு.சுகந்தி



நீண்ட கால யுத்தத்தின் பிடியிலிருந்து தமிழ் பிரதேசம் மீண்டு எழுந்து விட்டது. என்ற பொதுவான கருத்துக்கள் இருந்தாலும் யுத்தத்தின் போது ஏற்பட்ட வடுக்களில் இருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இடப்பெயர்வுக்கு முன்னைய காலங்களில் இருந்த நிலையும், தற்பொழுது இருக்கின்ற நிலமையும் மக்கள் மத்தியில் பல்வேறு விதமான கேள்விகளையும் ஒரு ஏக்கம் கலந்த நிலமையினையும் உருவாக்கி உள்ளது.

மீள் குடியேற்றம் புனர் நிர்மானம் அபிவிருத்தி என்ற பெருமெடுப்பிலான பிரச்சாரங்களின் தன்மையை பார்க்கும் போது ஆண்கள் ,சிறுவர்கள் ,பெண்கள் சுதந்திரமாக அனைத்து உரிமைகளுடனும் வாழ்கின்றார்கள் என்றுதான் தோன்றுகின்றது. ஆனால் அவர்களின் முகங்களிலோ வார்த்தைகளிலே வாழ்க்கயின் வெறுப்புக்கள் ஏக்கங் களும் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. போர் முடிந்துவிட்டது இனியாவது எல்லா வசதிகளுடனும் சுதந்திரமாக வாழலாம் என்ற நிலையோடும் பிள்ளைகளை சிறப்பாக கல்விநிலையில் முன்னேற்றலாம் என நினைத்திருக்கையில் அவற்றை மீறி பிரச்சினைகள் தான் அதிகமாக காணப்படுகின்றது.

பொருளதார நெருக்கடி தொழில் வாய்ப்பின்மை தன்னைச் சுற்றிய சமூகம் மாணவர்களின் மனங்களானது நடந்து முடிந்த கடைசீ யுத்தத்தின் வடுக்களையும் அந்த நினைவு களையும் சுமந்து நிற்பதாக தெரிகின்றது. இது பற்றி வன்னியின் சில பாடசாலை மாணவர்களுடன் உரையாடிய போது ஒரு கேள்வியை மட்டுமே கேட்டேன். போருக்கு முடிவடைந்து விட்டது. தற்போதும் உங்கள் மனநிலை எவ்வாறு காணப்படுகின்றது?

# ரணங்கள் ஆறியும் மாறாத வடுக்கள்

எனது பெயர் சரஸ்வதி சொந்த இடம் ஒட்டிசுட்டான் நான் எனது கணவர் பிள்ளை என சந்தோசமா வாழ்ந்து வந்தோம். என் கணவர் பாலகுமார் கூலி வேலை செய்து என்னையும் என் பிள்ளையையும் காப்பாற்றி வந்தார்.

இவ்வாறிருந்த நாங்கள் யுத்தம் உக்கிரமடைந்த நிலையில் கிட்டதட்ட 6 தடவைகள்இடம் பெயர்ந்தோம். ஒரு முறை பொக்கணை பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்தோம். பயங்கர செல் வந்து விழுந்து கொண்டிருந்தது. நானும் மகளும் பதுங்கு குழிக்குள் இருந்தோம். எனது கணவர் எங்களுக்காக குடிப்பதற்கு தண்ணீர் எடுக்க செல்லும் போது ஷெல் விழுந்து எம் கண் முன்னேயே இறந்து விட்டார். எமக்கும் தலைப்பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டன.

என் கணவன் இறந்த கணமே எனக்கு வாழ்க்கை சலித்து விட்டது. தற்போது எனது குடும்பம் வறுமையில் தான் உள்ளது. ஒவ்வொரு நாளையும் கழிப்பதற்கு சிரமாப் படுகின்றேன். இந்த நிலையிலே பிள்ளையின் கல்விச் செலவை என்னால் சமளிக்க முடியாது. ஏதோ தப்பிச்சோம் வாழ்ந்து முடிப்போம் என்றார் கண்ணீருடன்.



என் பெயர் தர்சிகா எனது இடம் கிளிநொச்சி மந்தநாறு யுத்தத்தில் எனது அண்ணனை இழந்து விட்டேன். வன்னியில் இறுதி கட்ட போர் மிகவும் உக்கிரமடைய பல இடங்கள் எங்கே செல்வது எனத் தெரியமால் ஒடி அலைந்தோம்.

தறப்பால் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வந்தோம். தண்ணீயில்லை சாப்பாடு இல்லை. ஒடி ஒடி அலைந்தோம் கடைசியாக முள்ளிவாய்க்கலை நோக்கிப் போனோம் போகையில் எறி கணை தாக்குதல் இடம் பெற்று கொண்டிருந்த வேளை என் அண்ணனை இழந்தேன் சம்பவ இடத்திலேயே அவனின் சடலத்தை விட்டு விட்டு வந்து விட்டோம் இன்றும் என் நெஞ்சை உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

என் அண்ணன் அழைப்பது போல் இருக்கும். வாழவே பிக்கவில்லை என் அண்ணன் என் மீது மிகுந்த பாசம் உடைய வன் அவனது இழப்பை என்னால் சு தாங்கிக் கொள்ள இயலவில்லை எனத் தெரிவித்தார்

நாங்க எங்கடா வீட்டிலை 5 பேர் நான் என் தம்பி என் அக்கா ஒன்று இறுதி கட்ட யுத்தம் ஆரம்பித்தது. நாங்கள் மாறி மாறி இடம்பெயாந்து 18 தடவைகள் இடம்பெயர்ந்தோம்.

இந்த இடப்பெயர்வு என்பது சொல்லி முடிய துயர். ஏனென்றால் அப்படியொரு இக்கட்டான நிலை தொடர் குண்டு மழை இதில் விமானத்திலிருந்து வேறு குண்டுகள் விழுந்த வண்ணம் உள்ளன. நாங்கள் முதல் எங்கடை இடத்திலையிருந்து விமானம் குண்டு வீச வெளிக்கிட்டு ஒட ஆம்பித்தோம். அந்த நேரங்கள் மிகவும் பயங்கரமாக இருந்தது. யார் அடுத்த நிமிடம் குண்டாடி படுவார்கள் என்று தெரியாது. வீட்டிலை இருந்து புதுமாத்தாளன் நோக்கி போயிக் கொண்டிருக்யையில் ஒரு நாள் மாறி மாறி தொடர குண்டுகள் பொலிய ஆரம்பித்தன.

அந்த நேரத்தில் எங்க அப்பாவுக்கு கையில் குண்டாடி பட்டது. எப்படியாவது அந்த இடத்தை விட்டு போயிடோனும் என்ற ஏக்கத்தில் நானும் தம்பியும் அப்பாவை தாங்கி கிட்டு ஒரு வழியாக புதுமாத்தளானில் உள்ள எனது நண்பியின் வீட்டை அடைந்தோம். காயத்திற்கு மருந்து கட்டுவதற்கு கூட அங்கு செல்ல வசதியில்லை. ஒரு மாதிரி இராணுவக்காட்டுப்பாட்டு பகுதிக்குள் நாங்கள் சிலர் இணைந்து சென்று விட்டோாம் பிறகு வவுனியா முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டோம். இந்தப் பெண் தற்சமயம் சிலவற்றை எண்ணி அஞ்சுவது தான் தந்தை செல் தாக்குதலுக்கு ஏற்பட்ட நேரம் கைகளிலிருந்து ரத்தம் வடிய வடிய அவரை தாங்கிய ரணங்கள் இன்றும் நினைத்து தான் அஞ்சுவதாக குறிப்பிட்டார்.


என்னுடைய சொந்த ஊர் புதுக்குடியிருப்பு நான் போரினால் எனது தந்தையயை இழந்தவன் கிட்டத்தட்ட போரினால் 11 தடவை இடம்பெயர்துள்ளோம்.

ஒரு முறை எனக்கு செல் துண்டு பட்டு காயம் ஏற்பட்டது. காயமடைந்த என்னை துக்கி சென்று மருந்து கட்ட வைத்தியசாலையில் விட்டு விட்டு வீடு திரும்பிய எனது கீபிர் குண்டு பட்டு உயிரிழந்து விட்டார். எனது தந்தை இறந்த சமயம் எனக்கு மிகவும் வேதனையை அழித்தது. இப்பொழுதும் நடந்த சம்பவங்கள் கண்ணெதிரே நடப்பது போல் தோன்றும் வீதியால் போகும் வேளைகளில் வீதியெங்கும் இரத்தமாக காணப்படுவது போல் தோன்றும். அப்பா இறந்த பின் மீண்டும் இடம் பெயர்ந்தோம். உண்ண உணவில்லை உடுக்கு உடுப்பு இல்லை. எத்தனையோ நாள் பட்டினியாக இருந்துள்ளேன்.




என் பெயர் சரவண முத்து நான் கிளிநொச்சியை சேர்ந்தவன் எனக்கு வயது 34 எனக்கு திருமணமாகி 2 வருடங்களில் மனைவி போரில் இறந்து விட்டார். நாங்கள் மிகுவம் சந்தோசமாக வாழ்ந்து வாந்தோம். யுத்த நேரங்கள் பேரவலம். ஏப்பா குண்டு எங்கடை வீட்டுக்கு மேலைவிழும் எண்டு சொல்ல முடிய அப்பிடி மழை மாதிரி பொழியும். நாங்கள் நிலத்திற்குள் குழி தோண்டி வசிக்க வேண்டிய நிலை நிம்மதியாக சாப்பிட்டதில்லை. காலை கடன் செஞ்சதில்லை. உயிரை கையிலை பிடிச்சு கொண்டு ஓடியதுதான் மிச்சம். மாணவர்களின் மனங்கள் பற்றி பாடசாலை ஆசிரியரான இராஜரட்ணம் மாணவர்கள் .குடும்ப வறுமை, உறவினர்கள், பெற்றோர்களின் இழப்புக்களில் இருந்து இன்னும் மீளவில்லை.

இதிலிருந்து அவர்கள் மீள வேண்டும். ஆதற்காக நல்ல வசதி வாய்ப்புக்களை ஏற்படுக்கிக்கொடுக்க வேண்டும் அது எல்லோரது கடமையுமாகும். இருந்தாலும் மாணவர்களின் மனங்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுத்தான் உள்ளது. குறிப்பிட்ட சில மாணவர்களின் மனநிலை இவ்வாறு இருக்கின்றபோது. வன்னி மாணவர்களின் ஒட்டு மொத்தபோருக்கு முன்னர் மாணவர்கள் கல்வியில் இருந்தஅக்கறையை விட தற்போது குறைவாகவே உள்ளது. இழந்து விட்ட உயிர்களை மீள பெறமுடியாது. இந்த மாணவர்களை அந்த நினைவுகளில் இருந்து விடுவிக்க வேண்டியது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கடமை. சில மாணவாகள் மோசமான மனநிலைக்கு ஆளாகியுள்ளானர்.



மூலம்: சசிதரன்
படங்கள் : இணையம் , நிருசாந்
தொகுப்பு : நிருசாந்த்

# யுத்தம் தந்த மனயுத்தம்







முப்பது வருட கால யுத்தம் மறக்க முடியாத மரண அவலங்களை எல்லோரிடமும் விட்டுச் சென்றிருக்கிறது. அந்த வலிகளை சுமந்தவாறு தமது சொந்த இடங்களில் கடந்த வருடம் மீள்குடியேறி இருக்கின்றார்கள் சாவகச்சேரி மறவன்புலோ கிராம மக்கள்.

எல்லா மீள்குடியேறிய பிரதேசங்கள் போல் அல்லது சிறிது சிறிதாக அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டு தான் இருக்கின்றது இக் கிராமம். இக்கிராமத்தில் வசிக்கும் 43வயதான முகுந்தன் புவனேஸ்வரி என்பவரை சந்திக்க முடிந்தது.

என்னோட கணவர் ஒரு இருதய நோயாளி. இருதயத்தில் சின்ன ஓட்டை இருக்காம். ஒரு நாள் மேசன் வேலைக்குப் போனால் நாலு, நாளாவது படுக்கையில் கிடப்பார். மூன்று வளர்ந்த பிள்ளைகளை வைச்சு நான் என்ன செய்யிறது? நிவாரணமும் நிப்பாட்டிப் போட்டினம், இனி சமுர்த்தி தான்பூ என்கிறார்.

இவரது பிள்ளைகள் யாழ்; மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்கள். மூத்தவர் குகன் உயர்தரம் படிக்கின்றார். தர்சனா பத்தாம் வகுப்பு. துர்க்கா மூன்றாம் வகுப்பு. பிள்ளைகளுக்கு சோதனைக் காசு கூட கட்டேல்லைபூ என கண்ணீர் மல்கின்றார் இந்தத் தாய்.

என்ர அம்மா எனக்கு பன்னிரண்டு வயசிருக்கும் போதே இறந்திட்டார். இவருடைய தாய் சாதி மாற்றி தான் எங்களுக்கு கலியாணம் செய்து வைத்தவா. முந்தி மட்டுவிலில் இருந்தனாங்கள். அங்க பிரச்சினை இல்லை. பக்கத்து வீடுகளுக்கு வேலை செய்யப் போறனான். சகோதரங்கள் ஒரு சகோதரங்கள் இருக்கினம் தான். ஒரு உதவியும் இல்லை. நாங்கள் கேட்கிறதும் இல்லை. கடைசி மகள் நோயாளி மாதிரி இருக்கிறா. சுறுசுறுப் பொண்டையும் கானேலை. அவளை நினைச்சுத் தான் சரியான கவலை.
அவளின் மனதை மாற்றுவதற்கு சரியாக கஸ்ரப் பட்டுக் கொண்டு தான் இருக்கிறேன்பூ என தன்னுடைய ஆதங்கங்களை கொட்டுகின்றார் இவர்.

இக்கிராமத்தின் மாதர் சங்கத் தலைவி சிவராசா சுப்புலட்சுமி(வயது57) கூறுகையில்,
இங்கு பெண்கள் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களே பெருமளவில் இருக்கின்றன. அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ஒரு பெண்ணுக்கு தையல் மிசின் வழங்கப்பட்டது. கணவனை இழந்த ஓர் பெண் மிக்ஷர் போன்ற பலகாரங்களை செய்து கடைக்கு கொடுக்கின்றார்பூ என்றார்.

விதவைகளுக்கு வாழ்வாதார முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. அவர்களுக்கு கே.கே.ஆர் எனும் நிறுவனம் 35000 ரூபா முதல் 50000 ரூபா வரை வழங்கியிருக்கின்றது.

தண்ணீர் உவர்நீராக இருக்கின்றது. குடி தண்ணீருக்காக பத்து கிலோமீற்றர் வரை செல்ல வேண்டியிருக்கின்றது. கடந்த வருடம் அமோகமாக நெல் விளைந்தது. ஆனால் போதிய சந்தை வாய்ப்பில்லை. அத்தோடு போக்குவரத்தும் கஷ்ரமாகவே இருக்கின்றது. தொலைதூரம் சென்றே பொருட்களை வாங்க வேண்டியிருக்கின்றது. பாடசாலை மாணவர்களும் அதிக தூரம் நடந்தே பாடசாலைக்கு வருகிறார்கள்.

இப்போது தான் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசம் என்றபடியால் ஒவ்வொரு தேவைகளையும் உடனே நிறைவேற்ற முடியாது. எனினும் அடிப்படைத் தேவைகளையாவது உடனே நிறைவேற்றலாம் தானே என்றார்.

இவர்களுடைய இயலாமை, ஆதங்கங்கள் வாழ்க்கை முழுவதும் இப்படித்தான் தொடருமா? இல்லை விடியல் பிறக்குமா?.....



மு.கௌசிகா




# மரணத்தை தேடிச் செல்லும் உயிர்கள்

யாழ்.மாவட்டத்தில் மோசமான போக்குவரத்து காரணமாக மக்கள் அதிகம் பாதிப்படைகின்றார்கள். தமக்கான விதியை தாமே தீர்மானிப்பதும் இவர்கள் தான். வீதி ஒழுங்குகளை முறையாக பின்பற்றாமையின் காரணமாக தமது முடிவை தாமே நிர்ணயித்துக் கொள்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தின் வீதிகள் எப்போதும் அச்சத்தை தருவதாகவே காணப்படுகின்றன. வீதிகளின் தரம் படிப்படியாக பாதுகாப்பானதாக மாறி வந்தாலும் கூட மக்களின் அசிரத்தை போக்கு காரணமாக வீதிவிபத்துக்களும் மரணங்களும் போட்டி போட்டுக்கொண்டு வந்து விடுகின்றன.




யாழ்ப்பாணத்தில் வாரம் ஒன்றிற்க்கு ஆறு வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது. மேலும் விபத்துக்களால் வாரமொன்றி குறைந்தது ஒரு மரணம் ஏற்படுவதுடன் ஐம்பது பேர் வரை காயம் அடைவதாகவும் அந்தக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இத்தொகை மிக அதிகமாகும் யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் வீதிக்குறியீடுகள் போடப்பட்டிருக்கின்றன. பொலிசாரும் பாடசாலை மாணவர்களும் கடமையில் ஈடுபடுகின்றனர். எனினும் பெரும்பான்மையான நேரங்களில் போக்குவரத்துப் பொலிசார் கடமையில் ஈடுபடுவது குறைவாகும்.

வீதி ஒழுங்குக் கட்டுப்பாட்டை ஏற்று மக்கள் நடக்காமை விபத்துக்களிற்கு காரணமாகி விடுகின்றதுபூ என இ.போ.ச பருத்தித்துறை டிப்போ சாரதி பி.ரமேஸ் கூறுகின்றார்.

மக்களும் சரி வாகனச்சாரதிகளும் சரி வீதிக் குறியீடுகளை சரிவர கவனித்து நடப்பதில்லை. சாரதி பயிற்சியை முறைப்படி பெற்றுக்கொள்ளாமல் சாரதி அனுமதியை பெற்றவர்களினால் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. அதற்கு இலஞ்சமும் ஒரு காரணமாகும்.

வாகனம் ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப் பத்திரத்தை பரீட்சையை எதிர்கொண்டே பெற்றுக் கொள்கின்றார்கள். பரீட்சையில் சித்தியடையும் அனைவருக்கும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் தெரியுமா என்ன?

வாகனம் ஓட்டுவதற்குரிய முறையான பயிற்சியை தான் வழங்குகின்றோம். எம்மிடம் பயிலும் போது சரியாக ஓட்டுகின்றனர். பின்னர் மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் வீதி ஒழுங்குகளை கவனிக்காமை போன்ற காரணங்களினால் அவர்கள் தவறு விடுகின்றார்கள். என்கின்றார் கிருபாலேனர்ஸ் சாரதி பயிற்சி நிறுவன சாரதி பயிற்றுநர் தி.தங்கேஸ்வரன்.

வீதி ஒழுங்கு முறைகள் பற்றிய அறிவு மக்களில் பெரும்பான்மையானோருக்கு இல்லை. யாழில் ஏற்படும் வீதி விபத்துக்கள் அனேகமாக மக்களின் கவனயீனத்தினாலேயே ஏற்படுகின்றன. வீதிக்குறியீடுகள் சமிக்ஞை விளக்குகள் போதியளவான கடமையில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிசார் என பல் வேறு காரணங்கள் இருந்தாலும் தமக்கான விதியை மக்களே ஏற்படுத்துகின்றார்கள்.

மு.கௌசிகா

"வேகமான பயணம் வேகமான மரணத்தை ஏற்படுத்தும்"

# பேசாத உடல்களுக்காக பேசும் ஊடகங்கள்

சிரியாவின் அரசியல் வன்முறைகளில் மிகவும் காத்திரமான செல்வாக்கை செலுத்திவரும் சமூக ஊடகங்கள் தனது சொந்த மக்களுக்கு எதிராக சாட்சியமற்ற யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் முகத்திரையை கிழிப்பதில் பெரும் பங்களிப்பு செய்துள்ளன.

சர்வதேச ஊடகவியலாளர்கள் எவருமற்ற நிலையில் பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் அந்த மக்கள் தமது அவலங்களை சொல்லத் தொடங்கியுள்ளனர்.
you tube இல் சிரியாவில் வெடிக்கும் ஏவுகணைகளின் சத்தத்தை கேட்கமுடிகின்றது ஓடும் இரத்தஆற்றை பார்க்க முடிகிறதென்றால் அது துணிச்சல் மிக்க citizen journalists கள் மூலமே சாத்தியமாகின்றது.

சிரியாவின் houla கிராமத்தில் இடம்பெற்ற மனிதப் படு கொலைகள் படங்களையும் ஒளி நாடாக்களையும் வெளியிட்டு சர்வதேச சமூகத்தின் கவனத்தை தன்பக்கம் திருப்பியிருக்கிறது ஒரு செய்தி நிறுவனம். houla கிராமத்தில் அரச படை களால் படுகொலைசெய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் படங்களை வெளியிட்ட snn (sham news network) மனிதப் படுகொலைக்களுக்கான மிகப்பெரிய ஆதாரத்தை வெளிக்கொண்டுவந்து முக்கிய பங்காற்றியிருக்கிறது.

அரச படைகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், படுகொலைகள் குறித்த படங்களை உடனுக்குடன் பொதுமக்களிடம் இருந்து பெற்று அதை வெளி உலகிற்கு காண்பிப்பதில் SNN போன்று பல உள்ளூர் குழுக்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. இதன் காரணமாக சாட்சியமற்ற ஒரு யுத்தத்தை நடத்தலாம் என்ற சிரிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு முறியடிக்கப் பட்டுள்ளது. கடும் உயிராபத்திற்கும் மத்தியில் மனித உரிமை ஆர்வலர்களும் செயற் பாட்டாளர்களும் பொதுமக்களும் தாங்களே ஊடகவியாளராக மாறி உண்மையை வெளிக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளும் இந்தப் போராட்டம் உலகின் கொந்தளிப் பான பகுதிகளில் ஊடக பணியாற்றப்படும் விதத்தை மாற்றிக் கொண்டிருக்கின்றது.

சிரியாவில் இடம்பெறும் இரத்தக் களறி குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக SNN +youtube இல் வெளியிட்ட 10 வீடியோக்கள் மிக முக்கியமானவை, இதில் அறையொன்றில் நீளத்திற்கு அடுக்கப்பட்டுள்ள சடலங்களை காண்பிக்கும் படம் சிரியாவில் இடம்




பெறும் வன்முறைக்கான ஒரு குறியீடாகவே மாறியுள்ளது.

சிரியாவின் அசாத் அரசாங்கம் மேற்கொண்டுவரும் அடக்குமுறைக்கு எதிராக நாளாந்தம் சிரிய மக்கள் மேற்கொண்டுள்ள போராட்டத்திற்கான ஒரு உதாரணமாகவும் இந்தப் படத்தையும் snn செய்தியமைப்பையும் குறிப்பிடலாம்.

பொதுமக்களும் செயற்பாட்டாளர்களும் நாளாந்தம் தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படும் வன்முறைகளை பதிவு செய்து இணையத்தின் ஊடாக விநியோகிக்கும் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர். அதனை மிகுந்த ஆபத்தின் மத்தியிலேயே அவர்கள் செய்கின்றனர். சிரிய மக்கள் தங்கள் அவலத்தை சொல்வதற்காக தங்கள் கண்முன்னே இடம்பெறுபவற்றை வீடியோவில் பதிவுசெய்து யு'ரி'ப் மூலமாக வெளி யுலகத்திற்கு கொண்டு செல்கின்றமை மிக முக்கிய மான விடயம் என்கிறார் சிரியாவின் எதிர்க் கட்சிக் குழுவின் உறுப்பினர் ஒருவர். தகவல்கள் நம்பகத்தன்மை மிகுந்தவையாக இருப்பதற்கு திகதியும் நன்கு ஆவணப்படுவதும் முக்கியமாவது என்பது இந்த மக்களுக்கு தெரிந்திருக்கிறது.



"இந்த வீடியோக்கள் என்றோ ஒருநாள் அவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும் பசார் அசாத் அரசாங்கத்தை நீதியின் முன் நிறுத்தும் என அந்தமக்கள் நம்புகின்றனர்" என்கிறார் அவர். ஒரு படம் 1000 சொற்களுக்கு சமமானது ஆனால் ஒரு வீடியோவோ அதைவிட பல் லாயிரம் மடங்கு பெறுமதியானது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சாம்நியுஸ் நெட்வேர்க் 2011இல் சிரியாவில் மோதல்கள் ஆரம்பமான பின்னரே உருவாக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. அபுல்கசன் என்பவரே இதனை ஆரம்பித்ததாக அதன்பேச்சாளர் என தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் அல்கீா தெரிவிக்கிறார்.

சாம்நியுஸ் நெட்வேர்க்கிற்காக எத்தனை பேர் பணி புரிகின்றனர் என்பது தனக்கே தெரியாது என்கிறார் அவர். S.S.N ற்கு பல செயற்பாட்டாளர்கள் பணி புரிகின்றனர், எண்ணிக்கை குறிப்பிட்டு சொல்ல முடியாது ஆனால் அவர்களில் பலர் கைது செய்யப் ப்ட்டுள்ளனர். கொல்லப்பட்டுள்ளனர், காயமடைந் துள்ளனர் இதனால் அவர்கள் மத்தியில் ஒருவித அச்சமும் காணப்படுகின்றது என்ற யதார்த்தையும் ஏற்றுக் கொள்கிறார்.தனது பணியாளர்களை செயற்பாட்டாளர்கள் என்றே அவர் அழைப்பது குறிப்பிடத்தக்கது. சிரியா அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிவரும் பொய்யான தகவல்களை முறியடிப்பதே எமது நோக்கம். பொய்ப்பிரச் சாரத்தை முறியடிப்பதற்காக இந்த போரை முன்னேடுத்துள்ள எங்களுக்கு போதிய பாது காப்பில்லை என்றும் அவர் வேதனைப்படுகிறார்.
உலகிற்கு உண்மை போய்ச் சேரவேண்டும் என்ற ஆதங்கத்தில் செயற்பாட்டாளர்களால் பதிவேற்றப்படும் பல ஒளிநாடாக்களை ஒழுங்குபடுத்தி வெளியுலகிற்கு கொண்டுபோதும் பணியையும் SNN போன்ற அமைப்புகள் மிகச் சிறப்பாக செய்கின்றன. மக்கள் ஆர் வத்தில் பல சர்ச்சைக்குரிய ஒளிநாடாக்களை பதிவேற்றுவார்கள் அதில் முழுமையான தகவல்கள் இருக்காது.

இவ்வாறான ஒளிநாடாக்கள் கிடைத்ததும் அவற்றை நாங்கள் SNN போன்ற அமைப்புகளுக்கு அனுப்புவோம். அவர்கள் முழுமையான விபரங்களுடன் அதனை வெளியுலகிற்கு கொண்டு போய்ச் சேர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றனர் என்கிறார் Storyful நிறுவனத்தின் Devid Clinch. பொதுமக்களால் அனுப்பப்படும் வீடியோக்களை ஆராய்ந்து பகிர்ந் தளிக்கும் பணியை இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறான தொழில் பிரிப்புக் காரணமாக தகவல்களை பாதுகாப்பாக பதிவேற்றுவது சுலபமாக காணப்படுகிறது. ஊடகவியலாளர்களால் தங்கள் பணியை மேற் கொள்ளவே முடியாத அதற்கு சாத்தியமே அற்ற ஒரு இடத்தில் இவ்வாறான படங்கள் மிக முக்கியமானவை யாக மாறியுள்ளன.
இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயம் எனத் தெரிவிக்கும் ஊடக நிறுவனங்களின் அதிகாரிகள் சிரியாவின் படுகொலை நடைபெற்ற கிராமங்களுக்கு சர்வதேசப் பத்திரிகையாளர்கள் செல்வது சாத்திய மில்லாத ஒன்று அவ்வாறான நிலையில் இவ்வாறான வீடியோவை SNN வெளியிட்டுள்ளது. உடல்களை மாத்திரமல்ல ஷெல்வீச்சுக் கூட பதிவாகியுள்ளது. இதனை செயற்பாட்டாளர்களும் பொதுமக்களும் SNN சாத்தியமாக்கியுள்ளன எனக் குறிப்பிடுகின்றனர்.

குலுவில் படுகொலை இடம்பெற்ற மறுநாள் ஐ.நா. அங்கு சென்று படம் பிடித்தது. ஆனால் அதற்கு முன்னரே அரசு பல தடையங்களை அப்புறப்படுத் திருக்கலாம், இவ்வாறான சூழ்நிலையில் வெளிக் கொண்டு வந்த அந்த வீடியோ மிக முக்கியமான ஆதாரம் பசார் அல் அசாத் அரசாங்கத்திற்கு எதிரான சனல் 4 ஆக அது மாறலாம் என்றும் சுட்டிக்காட்டப் படுகிறது.

-அரசரட்ணம் ரஜீவன்



நிலாவுடன் வாழ்ந்த கனவுகள் இனிய நெருக்கில் கனக்கிறது

நிலா....அவனை எனக்கு 1996 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். 1995 ஆம் ஆண்டு யுத்தத்தில் நாம் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்ததால் அந்த வருடம் எமக்கு நடக்கவேண்டிய புலமைப்பரிசில் பரீட்சை 1996 புரட்டாதி மாதம் வரை நடக்கவில்லை. அப்போது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நடத்திய போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து எம்மோடு ஆயிரம் ஆயிரம் கனவுகளைச் சுமந்தவாறு வந்தவர்களில் அவனும் ஒருவன்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது அன்றைய நாள். அது ஆனிமாதம் பத்தாம் திகதி திங்கட்கிழமை அன்றுதான் நான் அவனை முதன்முதலில் சந்தித்திருந்தேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பிரார்த்தனை மண்டபம் வரலாற்றுச்

# ஒரு பேனாவை வீழ்த்த துப்பாக்கிகள் எழுந்தன

சிறப்புமிக்கது. சுவாமி விவேகானந்தர் உட்பட பல அறிஞர்கள் வந்து உரையாற்றிய பெருமை அந்த மண்டபத்திற்கு இருக்கிறது. யாழ். இந்துவில் எங்கள் பயணம் ஆரம்பித்ததும் அந்த மண்டபத்திலிருந்துதான். அப்போதுதான் அவனை எங்களில் ஒருவனாய் சந்தித்தேன். அவன் எல்லோரிடமும் அந்த முதல் சந்திப்பிலேயே தனது பெயர் கூறி தன்னை அறிமுகம் செய்துகொண்டிருந்தான். என்னிடம் வந்து தனது பெயரைக் கூறியவன் எனது பெயரையும் ஊரையும் கேட்டுவிட்டு பக்கத்து ஊர் என்றான்.

அன்று வகுப்புக்கள் பிரித்து எம்மை வகுப்பறைகளுக்கு அனுமதித்தபோது எனக்கு முன் இருக்கையில் அவன் இருந்தான். அவன்தான் எங்கள் வகுப்புத் தலைவன். 96 ஆம் ஆண்டின் பின் யாழ் இந்துவில் சேர்ந்தவர்களில் நிலா அண்ணா என்றால் தெரியாதவர்கள் எவரும் இருக்கமுடியாது. நாம் அவனை நிலா என்றுதான் அழைப்போம். அவனது பேச்சுக்கள் எப்போதும் தமிழ் மாணவர்களின் கல்வி பற்றியதாகவே இருந்தது.

க.பொ.த சாதாரண தரம் வரை தனது ஆளுமையை வளர்த்துக் கொண்ட அவன் உயர்தரம் படிக்க கலைத் துறையைத் தேர்ந்தெடுத்தான். எங்கள் வகுப்பில் கலைத் துறை படித்தவர்கள் 19 தோழர்கள். அதில் நிலாவும் ஒருவன் நீண்ட கால இடைவெளியின் பின் யாழ். இந்துவில் அதிகப் பேர் கலைத்துறையை விரும்பி தெரிவு செய்த வகுப்பு என்ற பெருமையை எங்களுடைய வகுப்பு பெற்றிருந்தது. இந்துவைப் பொறுத்தவரை கணித விஞ்ஞான பிரிவுகளையே எல்லோரும் விரும்பும் வழக்கமும் கௌரவம் என்ற நிலையும் இருந்து வந்தது. கலை, வர்த்தகத்தில் ஐந்து முதல் பத்துப் பேருக்கு மேல் படிப்பதில்லை.

அந்த வருடம் வர்த்தகத்தில் நாற்பது மாணவர்கள் தம்மை இணைத்திருந்தனர். நிலா தான் சட்டம் படிக்க வேண்டும் என விரும்பி கலைத்துறையை நாடியிருந்தான். நிலா தன்னை இந்து மாமன்றம், தமிழ் மன்றம் என கழகங்களில் ஈடுபடுத்தியிருந்தான்.

கலை மாணவர் ஒன்றியத் தலைவரும் மாணவ முதல்வரும் அவன்தான். எங்கள் செல்லத்துரை இல்லத்தின் தலைவரும் அவன்தான். அவன் தனது பேச்சாற்றலால் பல தம்பிமார்களை தனக்குப் பின்னால் வைத்திருந்தான். வகுப்புக்களில் ஏதும் பிரச்சனை என்றால் தம்பிகள் நிலாவின் வகுப்புக்கு முன்னால் திரண்டுவிடுவார்கள். அவனது வசீகரப் பேச்சுக்கள் அன்றைய பொழுதுகளில் பலரையும் கவர்ந்திருந்தது. அன்றைய சூழல் சமாதான காலம் என்ற முகமூடியை அணிந்திருந்த போதும் தமிழ் மாணவருக்கு எதிரான வன்முறைகளும் அச்சுறுத்தல்களும் அதிகமாகவே காணப்பட்டிருந்தது.



நிலா அப்போதெல்லாம் கூட்டங்கள் ஒன்றுகூடல்கள் என மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தான்.

உயர்தரப்படிப்பு முடிந்துபோக நிலா தன்னை ஊடகத் துறையின்பால் இணைத்துக் கொண்டான். யாழ்ப்பாண த்தில் இருந்து வெளிவரும் சாளரம் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த நிலா யாழ் மாவட்ட மாணவர் அமைப்புடனும் தொடர்புடையவராக இருந்தான்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் தன்னை ஊடக மாணவனாக இணைத்துக் கொண்ட நிலக்ஸன் ஊடகங்களுடனும் ஊடகவியலாளர்களுடனும் நெருக்கமான உறவு களைப் பேணி குடாநாட்டில் நிலவிய பிரச்சினைகள் தொடர்பாக வெளிஉலகிற்கு பகிரங்கப்படுத்தி வந்தான்.

தமிழ் மாணவர்களது உரிமைகளில் நிலாவின் குரலின் பங்களிப்பு முக்கியமானது. அவனது எழுத்துக்களின் தாக்கத்தை சாளரம் சஞ்சிகை வாங்க அன்றைய நாட்களில் மாணவர்கள் வாங்க காட்டிய முனைப்புக் களில் அறிந்திருக்க முடியும். பாடசாலை மாணவர் அமைப்பாக ஆரம்பித்த அவனது பயணம் சர்வதேச தமிழ் மாணவர் அமைப்புவரை விரிவுபட்டிருந்தது.

அன்றைய சூழல் மிகவும் பயங்கரமானதாகவே இருந்தது. யுத்த அரக்கன் தனது சமாதானம் என்ற முகமூடியை கிழித்து எறிந்திருந்த காலம் அது. மாலை ஆறு மணியோடு மக்கள் அனைவரும் வீடுகளுக்குள் முடங்கிப் போயிருந்த ஊரடங்குச் சட்டவேளை இரவு வேளைகளில் வெள்ளை ஊர்திகள் உறுமித் திரிந்த காலம். இனந்தெரியாத ஆயுததாரிகளின் கோரங்கள் தாண்டவமாடிய காலம்.

நிலாவின் படுகொலையும் இனந்தெரியாத ஆயுததாரி களின் கைவரிசை என்ற பட்டியலுக்குள் தான் அடங்கிப்போயிருந்தது.

ஊடக மாணவர்களின் பயிற்சி ஒன்றிற்காய் கொழும்பு சென்று சென்று விட்டு வீடு வந்த நிலா மறுநாள் 2007 ஆம் அண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி காலை 5.00 மணியளவில் மோட்டார் வண்டியில் வந்த ஆயுததாரி களால் அவனது வீட்டில் வைத்து சுடப்பட்டான். வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள் நிலாவுடன் கதைக்க வேண்டும் என கேட்க விபரீதம் அறியாத அவன், வீட்டு முற்றம் வரை வந்தபோது அவன் பெற்றோர் முன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

அன்றைய தினம் காலை கொக்குவிலில் ஒருவரை சுட்டுக் கொன்றதாய் கேள்விப்பட்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லுதல் என்பது அன்றைய நாட்களில் இனந்தெரியாத ஆயுததாரிகளின் அன்றாட நடவடிக்கையாக இருந்ததால் நான் அலுவலகம் சென்றுவிட்டேன். அது அவன் தான் என அன்று இரவு பி.பி.சி கேட்கும் வரை நான் அறிந்திருக்கவில்லை.

## நிலா ஆயுதம் ஏந்திய போராளிஅல்ல எழுத்துக்களால் சாதிக்கத் துடித்த ஒரு பேனாப் போராளி

அவனது இறுதி ஊர்வலத்திற்கு யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்பதை அறிய புலனாய்வாளர்களை குவிக்க காட்டிய அக்கறையை அவனது மரணத்திற்கு காரணமானவர்களை கண்டறியவோ கைதுசெய்யவோ சட்டத்தின் முன்நிறுத்தவோ எவரும் அக்கறை காட்டவில்லை நிலா கொல்லப்பட்டு இன்றோடு நான்கு வருடங்கள் முடிந்துவிட்டது. நிலாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. நிலா மட்டுமல்ல இன்று வரை நிலா உட்பட இலங்கையில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய விசாரணைகள் எதுவுமே முற்றுப்பெறவில்லை. அச்சுறுத்தல்கள் காரணமாக இன்று வரை வெளிநாடுகளுக்கு புகலிடம்தேடி ஓடும் ஊடகவிய லாளர்கள் பட்டியல் நீண்டு கொண்டுதான் இருக்கிறது.

ஆனால் இந்த விடயங்களில் ஊடக அமைப்புக்களும் சர்வதேச ஊடகம் சார் மற்றும் சாராத ஐ.நா அமைப்புக் களும் ஊடகவிலாளர்களின் மரணத்தின்போது கண்டன அறிக்கை. ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலம், மலர்வளையம் வைத்தல் போன்ற சம்பிரதாயங்களோடு தங்கள் பணியை முடித்து விடுகின்றன. தங்கள் உயிரகளைத் துச்சமாக்கி மரணித்துப் போன ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் என்ன செய்கிறன. அவர்களது எதிரகாலம் அவர்களிற்கான நீதி போன்ற விடயங்களில் மௌனித்துப் போனவர் களாகவே இருக்கின்றனர்.

நிலா ஆயுதம் ஏந்திய போராளிஅல்ல. அவன் பேனா தூக்கி எழுத்துக்களால் சாதிக்கத் துடித்த ஒரு பேனாப் போராளி. ஊடகத்துறையில் சாதிக்க களம் புகுந்து படுகொலை செய்யப்பட்டவர்களில் அவனும் ஒருவன். இலங்கையின் கறை படிந்த ஊடக ஜனநாயகத்தில் பக்கங்களில் நிலாவின் மரணமும் ஒரு சகாப்தம்.

ஆக்கம்: கலியுகன்

# மௌன வலிகள்

யாருமே எதிர்பாராத நேரத்தில் எதிர்பாரத விதத்தில் இலங்கையில் யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் யுத்தம் தந்த வடுக்கள், வேதனைகளை இன்றும் எமது மக்கள் அனுபவித்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அனுபவித்த வேதனை போதாதென்று யுத்தத்தின் பின்னரான விளைவுகள் அதனை விட மோசமானதாக உள்ளது. அதிலும் குறிப்பாக கணவனை இழந்த குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்களின் தொகை அதிகரிப்பால் அவர்கள் எதிர நோக்கும் பிரச்சினைகள் சொல்லித் தீராத சோகங்களை உண்டு பண்ணுகிறது.



யுத்தத்தின் பின் நம் தமிழ் சமுகத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துள்ளது. இதனால் அவர்கள் முகம் கொடுக்கும் சமூக, பொருளாதார, கலாசார பிரச்சினைகள் அதிகரித்து செல்கின்றன.

கணவனை இழந்து தனித்து தனது குடும்பத்தினை கொண்டு நடாத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளும் பாதிப்புக்களும் அதனால் சமூகம் சார்ந்து எதிர்நோக்கும் சவால்களும் என எத்தனை துன்பியல் நிலைமைகள் இவர்களை வட்ட மிடுகின்றன. குறிப்பாக குடும்பம் என்ற கட்டமைப்பையே யுத்தம் சிதைத்து விட்டதென்று கூறலாம்.

இதுவரை சமூகத்தில் இவர்களுக்கு இருந்த பாதுகாப்பு நொடிப் பொழுதில் அவர்களை விட்டகல அங்கு உதித்த வாழ்க்கைக்குள் செல்ல எமது பெண்கள் தயாராக இருக்க வில்லை. இதனால் தமது குடும்பத்துக்கு தேவையான பொருளாதார தளங்களை அமைப்பதில் தனியாட்களாக பங்குவகிக்க முயன்று தத்தளித்து கொண்டிருக்கின்றனர்.

இது பற்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 46 வயதான மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சத்தியவதி தெரிவிக்கும் போது, எனது கணவர் யுத்தம் இடம்பெற்ற போது இறந்து விட்டார். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கு. எங்கடை குடும்பத்த பார்க்க யாரும் இல்லை. எங்களுக்கு போதிய வருமானமும் இல்லை. பிள்ளைகளை படிக்க வைக்கிறது ரொம்ப கஸ்டம். ஏதோ என் இந்த வாழ்க்கை எண்டு இருக்கு எங்களுக்கு எந்த அரசியல் கட்சியும் வந்து எமக்கு உதவி செய்யவில்லை. அவர்கள் தேர்தல் நேரங்களில் மட்டும் வருகின்றனர்" என்றார். மற்றும்படி எந்தவித உதவியும் எம்மை கிட்டவில்லை என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

இவை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள உள்நாட்டு தொண்டு நிறுவனமான மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளரான சரோஜா சிவச்சந்திரன் தெரிவிக்கும் போது,

"யாழ்ப்பாண மாவட்டத்தில் 26 ஆயிரத்து 340 பேரும் கிளி நொச்சியில் 5 ஆயிரத்து 403 பேரும் வவுனியாவில் 4 ஆயிரத்து 303 பேரும் மற்றும் மன்னாரில் 3 ஆயிரத்து 994 பேரும் விதவைகளாக உள்ளனர்" என குறிப்பிட்டார். மேலும் இந்த விதவைகளின் கணவன்மார் மோதல்களின் போது கொல்லப்பட்டுள்ளதாக கூறினார்.

இவ்வாறு யுத்தத்தின் போது கணிசமான பெண்களின் கணவர்கள் கடத்தப்பட்டும் காணாமல் போயும் இருக் கிறார்கள். இதனால் தற்கொலை செய்யும் குடும்பங்களும் காணாமல் போனவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பது தெரியாத நிலையில் பல பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நானோ விதவை பட்டியலில் -நீங்கள்
காணாமல் போனவர் பட்டியலில்
திருமதியாய் பதவி உயர்வு தந்து
என் கழுத்தில் -நீங்கள்
போட்ட தாலி
வட்டிகடைக்கு போனது
ஈடுவைக்கப்பட்ட தாலி -மீண்டும்
என் கழுத்தில் ஏறுமா?
நெற்றிக்குங்குமம் கரைந்து போகுமா???.....



அத்துடன் சமூகத்தின் பழிசொற்களுக்கும் அஞ்சியே இவர்கள் வாழ வேண்டியுள்ளது.

தென்பகுதி விதவைப் பெண்களுக்கென அரசாங்கம் பல்வேறு புனர்வாழ்வுப் பணிகளையும் சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகளையும் வேலை வாய்ப்புகளையும் வழங்கிவரும் நிலையில் வடக்கு, கிழக்கு விதவைப் பெண்கள் அரசினாலும் கைவிடப்பட்டநிலையிலேயே காணப்படுகின்றனர். இவர்களுக்கான எந்தவித புனர் வாழ்வுப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இதேவேளை இலங்கையை பொறுத்தவரையில் பெண்களை பாதுகாப்பது தொடர்பான போதியளவான சட்ட விதிகள் இருந்தும் அந்த சட்டவிதிகளை பெண்கள் அறிந்திருப் பது மிகக் குறைவான எண்ணிக்கை யாகவேயுள்ளது.


தம்மை பாதுகாக்கக் கூடிய தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிரான இந்த சட்டவிதிகளை அறிந்து கொள்வதில் பெண்கள் நாட்டம் கொள்ளவில்லையென்பதுடன் இச்சட்ட விதிகள் தொடர்பில் பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த சட்டவிதிகளை அமுலாக்க வேண்டிய பொறுப்பு அதிகாரிகளது கடமையுமாகும்.

இவ்வாறு கேள்விக்குறியான நிலையில் வாழும் விதவை பெண்களின் மீதே குடும்பத்தின் வருமானம் ஈட்ட வேண்டிய பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. தங்களின் இயலுமைக்கேற்ற தொழிலை தேடிக் கொள்கின்றனர். வறுமை ஒருபக்கம் வாட்டுவது போதாதென்று பாலியல் தொந்தரவுகள் பாலியல் சுரண்டல்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள்

வடக்கு கிழக்கு விதவைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் கணவன்மாரை மட்டுமன்றி சொத்துக்களையும் அவர்கள் சார்ந்திருக்கின்ற சொந்த நிலங்களையும் வாழ்க்கையை கொண்டு நடத்த தேவையான ஆதாரங்களையும் இழந்து இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.



எனவே வடக்கிலும் கிழக்கிலும் உள்ள குடும்பத் தலைவரை இழந்துள்ள பெண்களுக்கு நீதி, உரிய பராமரிப்பு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரதும் கடமையாகிறது.



எஸ்.ஹம்ஷா



# யுத்தம் ஏற்படுத்திய வடுக்கள்

கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் 1999ம் ஆண்டு தமது சொந்த மண்ணை விட்டு திடீர் என்று இடம்பெயர வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டனர் தனங்கிளப்பு மறவன்புலோ மக்கள்.




மறவன்புலோ தனங்கிளப்பு பிரதேசங்களில் 2010ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட போது இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டபோதும், இன்னும் பல்வேறு குறைபாடுகள் இருந்துகொண்டு தான் உள்ளன.

இது பற்றி தனங்கிளப்பு பகுதியைச் சேர்ந்த சுப்பையா வேலானந்தம் குறிப்பிடும் போது,"நாங்கள் 14.07.2011 அன்று தான் இங்க வந்து மீள்குடியேறினோம். எங்களுக்கு முன்னமே இங்கை நிறைய பேர் வந்து மீள்குடியேற்றினம். நாங்கள் மீளக்குடியமரேக்க பல அரசியல் அதிகாரிகளும முக்கிய பிரமுகர்களும் வந்து எங்களுக்கு பல உதவி செய்யிறதாயும் பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் முன்மொழிகளை வழங்கினர்கள்".

"நாங்களும் எங்கட பிரச்சனைகளை கூறினோம். இப்ப வரைக்கும் அதிலை அரைவாசியை கூட செய்யேல்லை. மேலும் இந்த பிரதேசத்தில் இருக்கின்ற சனம் விவாசயத்தையும் மீன்பிடியையும் சீவல் தொழிலையும் தான் நம்பி இருக்கு. கடந்த கால யுத்த அனர்த்தத்தால் எங்கட வீடுகளும் மரங்கள், பனைகள் எண்டு எல்லாம் அழிஞ்சு போயிட்டு. இப்ப கொஞ்சம் கொஞ்சமாக அரச சார்பற்ற நிறுவனம் மலசலகூடம், கிணறு போன்றவற்றை புனரமைப்பு செய்து தருகின்றது" என தன் மன வேதனையை கொட்டி தீர்த்தார். தனங்கிளப்புதான் இவ்வாறு யுத்தத்தின் வடுக்களை சுமந்து நிற்கின்றது எனப் பார்த்தால் கௌதாரிமுனை, வெட்டுக்காடு போன்ற பிரதேசங்களும் இப்போது தான் புத்துணர்வை எட்டிப் பார்க்கின்றது.

சம நிலங்களாக காணப்பட்ட பல பகுதிகள் பல பாதுகாப்பு அணைகள் காவலரண்கள் என்பன அமைக்கப்பட்ட தன் காரணமாக இன்னமும் ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றன. இது தவிர இப்பிரதேசம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. நெற்செய்கைப் பிரதேசம் மஞ்சள்குளம், கீரைவாய்க்கால்குளம், பனங்காய் குளம் ஆகிய நேர்கோட்டுப் பகுதிக்குள் கிழக்கே உள்ள பிரதேசம் ஆகும் இப்பிரதேசம் அண்ணளவாக 1600 காக்டெயர் வயல் நிலங்களை கொண்ட புளியம்பட்டி வடக்கு வெளி பனங்காய்க்குளவெளி ஆகிய முக்கிய வயல் நிலப் பிரதேசங்களைக் கொண்டது.

கடந்த 2 ஆண்டுகளாக தனங்கிளப்பு புகையிரத கடவையில் இருந்து ஆரம்பித்து தென் புறமாகவுள்ள தனங்கிளப்பு அம்மன் கோவில் வரை நேர்கோடாக தற்காலிக முள் வேலிகள் இடப்பட்டிருக்கின்றன.





தற்போது மீளக்குடியமாத்தப்பட்ட வேளையில் கால்நடைகளைக் கட்டுப் படுத்தி விவசாயத்துக்கான ஏற்பாடு களை முழுமையாக செய்து தருமாறு இப்பிரதேச விவசாயி தங்கராஜா கூறினார்.

இது சம்பந்தமாக அரசியல்வாதிகளி டமும் பிரதேச செயலாளரிடமும் தாங்கள் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும் இது சம்பந்த மாக கடந்த காலங்களில் திட்டமிடல் பணிப்பாளர் விவசாய உத்தி யோகத்தர், கிராம உத்தியோகத்தர் களுடன் பொதுமக்கள் இணைந்து கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார், "இதன் போது சில முடிவுகள் எடுக்கப்பட்ட போதும் சில நடைமுறை சிக்கல்கள் காரண மாக இன்று வரை கால்நடைகளை கட்டுப்படுத்துவதில் சிக்கல் காணப் பட்டே வருகின்றது. இது தவிர இங்குள்ள குளங்கள் தற் பொழுது தான புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. அவை புனரமைப்பு செய்யப்பட்டாலே கால்நடைகளுக் கான நீர் பற்றாக்குறை தீரும்"என்று தெரிவித்தார்.

மேலும் பாதிக்கபட்ட விவசாயி சிவாகதன் குறிப்பிடும்போது கால் நடைகளால் போன போகம் 600 ஏக்கர் வயல் பரப்பில் அறுவடை செய்யவில்லை. "பத்து வருடத்துக் கப்புறம் போன போகம் தான் விதைப்புகளை மேற்கொண்டோம். விதைத்தவை பயிராகும் காலத்தில் இந்தப் பகுதியில் உள்ள கால்நடைகள் பயிர்களை மேய்ந்து விட்டன".

"பகல் வேளைகளில் நாங்கள் தங்கியிருந்து குழுவாக சேர்ந்து வரும் மாடுகளை துரத்தி வந்தோம். ஆனால் இரவு வேளை களிலே கூட்டமாக வரும் பன்றிகள் அனைத்துப் பயிர்களையும் நாசம் செய்து விட்டு போகின்றன. இதனால் நாங்கள் பெரிதும் பாதிப்புக் குள்ளாகின்றோம். இந்த வயல்களில் விதைத்து உரிய பயன் பெற முடியாத நிலையில் நாம் நஷ்டம் அடைந் தோம்" என்றார்.

மறவன் புலோ பிரதேசத்தை சேர்ந்த கௌரியம்பாள் தெரிவிக்கும் போது இடப்பெயர்வுக்கு முன்னர் இருந்த பல கிணறுகள் தற்போது இருந்த இடம் தெரியாது மறைந்து விட்டன. இருக்கும் சில கிணறுகளில் பல புனரமைக்கபட்டுள்ளன. ஆயினும் பெரும்பலான கிணறுகள் உப்புத் தன்மையுடனேயே காணப்படுகின்றன. இதனால் நன்னீருக்காக நீண்ட தூரம் வரை அலைந்து திரிய வேண்டிய சூழ் நிலை காணப்படுகின்றது.

கால்நடைகளை பொறுத்த வரையில் இங்குள்ள கால்நடைகளுக்கு ஒரு சில குளங்களே பயன்பாட்டில் இருந்து வந்தன. தற்போது ஏற்பட்ட கடும் வறட்சியால் ஒரு சில நீர் நிலைகளி லேயே நீர் தேங்கி நிற்கின்றன. அது மட்டுமன்றி இவற்றை சாதகமாக பயன்படுத்தி ஒரு சில மாட்டு திருடர்கள் தடம் வைத்து மாடுகளை பிடித்து இறைச்சிக்காக வெளி இடங்களுக்கு விற்கின்றனர்.

சில கால்நடைகள் பராமரிப்பின்றி கால்கள் கழுத்து என்பவற்றில் நைலோன் கயிறு கேபிள் கயிறு என்பன கட்டப்பட்டு இறுகி இறந்து கிடக்கின்றன. இப்போதும் சில மாடு கள் நைலோன் கயிறுகள் இறுகப்பட்டு அலைந்து திரிவதைக் காணலாம் எனக் குறிப்பிட்டார்.


மீள் குடியேறி 3 வருடங்கள் கடக்கும் நிலையில் இன்னும் புரண மாக இவ்வறான பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற் கொள்ளப்படவில்லை.

அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இந்த மக்களின் பிரச்சனைகளை கவனத்திற் கொள்வத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என்பது இம் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

நே.நிருசாந்த்



# பாம்பென்றால் படையும் நடுங்கும்



இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வட முனையில் பருத்தித்துறை நகரின் கீழ்த்திசையில் 16 கிலோ மீற்றர் தொலைவில் பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியில் வரலாற்றுப் புகழ் மிக்க நாகர்கோவில் என்னும் கிராமம் அமைந்துள்ளது.
இங்கு மருதநிலமும் பாலைநிலமும் பொருந்தியுள்ள இடத்தில் மிகத் தொன்மை வாய்ந்த நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயமும் பிரசித்தி பெற்ற நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலயமும் உண்டு. இக் கிராமத்திற்கு நாகர்கோவில் என்னும் பெயர் கொண்டதையிட்டு பலரும் பலவாறு கூறுவர்.



ஆதியில் இங்கு பெருந்தொகையான நாகசர்ப்பங்கள் மண்டலமிட்டு இருந்த காரணத்தினால் இப்பெயர் உண்டானதென்றும் வரலாற்றுப் புகழ்பெற்ற பூர்வீக நாகதம்பிரான் கோவில் கொண்டு எழுந்தருளியிருந்த காரணத்தினால் உண்டானதென்றும் ஆதியிலே பழங்குடி மக்களாகிய இயக்கர், நாகர் காலத்திலுள்ள நாகர் என்ற சாதியினர் வாழ்ந்த காரணத்தினாலும் நாகரது சிற்றூராக விளங்கிய தன்மையினாலும் இப்பெயர் உண்டானதென்றும் நம் முன்னவர்கள் கூறுவர்.

யுத்தத்தின் பின் 2009ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையை தொடர்ந்து இக்கிராமத்தில் மிகப்பிரசித்தி பெற்ற நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்திற்கும் நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. நாகேஸ்வரப் பெருமானை எம்மவர் சிறை மீட்டவன் என்றும் அழைப்பர். அதற்கும் கப்பல் திருவிழா விற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இங்கு புரட்டாசி மாதத்தில் பத்துத் திருவிழாக்கள் நடைபெறுகின்றது.

இதில் கப்பல் திருவிழா புரட்டாசி மாத பூரணையின் பின் வருகின்ற பிரதமை திதியில் ஏழாவது விழாவாக வருடா வருடம் நடைபெறுகின்றது.இலங்கையிலுள்ள சிவதலங்கள் எதிலும் கப்பல் திருவிழா கொண்டாடப்படுவதில்லை. ஆனால் எமது நாகர்கோவில் கிராமத்தில் மட்டும் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. இவ் விழாவிற்கும்

இக் கிராமத்திற்கும் இப்பதிக்கு வடக்கே உள்ள கவுத்தந்துறை க்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் காணலாம். இது நாகம்சரிந்த வாய்க்கால் என்று எம்மவரால் அழைக்கப்படும். பாதையொன்று இத்துறையிலிருந்து பூர்வீக நாகதம்பிரான் ஆலயம் வரை பள்ளமான பகுதியாக இருப்பதை இன்றும் நாம் காணலாம்.

முன்னொரு காலத்தில் தென்னிந்தியாவில் சம்புத்தீவு என்னும் பிரிவைச் சேர்ந்த திருவானந்தபுரம் என்ற கிராமம் பெருமழை காரணமாக அழிந்து பெருந்தொகையான மக்கள் இறந்தும் போயினர்.

இப்பகுதியில் மக்களைக் குடியேற்றுவதற்கு விரும்பிய அந்நாட்டு மன்னன் சேர சோழ பாண்டிய மண்டலங்களில் ஒன்றாக விளங்கிய இலங்கைத் தீவிலிருந்து மக்களைக் கொண்டு செல்வதற்காக தனது சேனைத் தலைவர்களையும் படைகளையும் அனுப்பி இருந்தான்.

இப்படைகள் தனுஸ்கோடிக்கரையாக காங்கேசன் துறை, மயிலிட்டி, வல்லிவெட்டித்துறை, பருத்தித்துறை கற்கோவளம் அங்குள்ள மக்களில் சிலரையும் ஏற்றிக்கொண்டு நாகர் கோவில் கவுத்தந்துறையில் புரட்டாசி மாதம் நங்கூரம் இட்டனர்.

ஏழு நாட்களாகத் தங்கிநின்ற போதும் ஒருவர் கூடப் போய் இவர்கள் கொண்டுவந்த பொருட்களை வாங்கவில்லை. பொருட்களை வாங்கவில்லையென்று துரை கவலைப்பட வில்லை. மக்களை தம்முடன் அழைத்துச் செல்ல எண்ணினார்.



நாகம்சரிந்த வாய்க்கால் என்று மக்களால் அழைக்கப்படும். நாகதம்பிரான் ஆலயத்தில் காணப்படும் பள்ளமான பகுதி

அவர்களுடன் செல்வதற்கு அம்மக்கள் மறுப்பினை தெரிவித்தனா். அதனால் கோபமடைந்த துரையவர்கள் எவ்வளவு கூறியும் நீஙகள் வர மறுப்பதால் உங்கள் எல்லோரையும் கப்பலில் ஏற்றும்படி எனது படைவீரர் களுக்கு கட்டளையிடப் போகிறேன் என்றான். படையினர் வலுக்கட்டாயமாக மக்களைக் கப்பலில் ஏற்றுகின்றார்கள். எம்பகுதி மக்களை அன்னியர் சூறையாடுகிறார்களே... என மக்கள் ஓலமிடுகிறார்கள்.


இன்றும் ஆலயத்திற்குள் கண்களுக்கு புலப்பட்டு திரியும் நாகம்

“நாகதம்பிரானே உன் கண்தான் குருடானதோ, காது தான் செவிடானதோ, எம்மக்களைக் காப்பாற்றுவாயாக என்று தமது குலதெய்வம் நாகதம்பிரான் முன்னிலையில் ஓலமிட்டு முறையிடுகிறார்கள். கப்பல் பிரயாணத்துக்கு ஆயத்தமாகியது.

கப்பல் நகர மறுக்கிறது: படையினர் பாய்மரங்களை பரிசோதிக்கிறார்கள். பாய்மரத்திலே பாம்பொன்று காணப்படுகிறது. பாம்பென்றால் படையும் நடுங்கும் படையினர் கப்பல் துரைக்கு அறிவிக்கிறார்கள். சா்ப்பத்தை வெட்டும்படி கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. படையினர் சர்ப்பத்தை வெட்டுகிறார்கள். வெட்டுண்ட சர்ப்பத்தின் இரத்தத் துளிகளிலிருந்து பல ஆயிரம் சர்ப்பங்கள் தோன்றி படையினரைக் கலங்க வைக்கின்றது.

அப்பொழுது படையினரில் ஒருவர் ஆவேசம் கொண்டு “இப்பகுதி மக்களை இறக்கிவிட்டால் கப்பல் நகரும்” என்கிறான். “கப்பலில் பல இடத்து மக்களும் இருக்கிறார்கள் இப்பகுதி மக்களை எப்படி அடையாளம் காணலாம்”என்று கப்பல்துரை வினவுகிறார். ஆவேசக்காரர் மாவினை அள்ளிவீசுகிறார் மாக்குறி கண்டவர்களை இறக்கினால் கப்பல் நகரும் என்கிறார். மாக்குறி கண்டவர்களை இறக்குமாறு கப்பல்துரை பணிக்கிறார். மாக்குறி கண்ட மக்கள் இறக்கப்படுகின்றனர். ஒவ்வொருவரையும் இறக்கும் போது ஒவ்வொரு பாம்பும் இறங்குகிறது. ஆனால் கப்பல் நகரவில்லை. மீண்டும் ஆவேசகாரரிடம் கப்பல்துரை வினவுகிறார். கப்பல் நகரவில்லையேயென ஆவேசகாரர் கூறுகிறார். கீழ்த்தளத்திலுள்ள ஒரு அறையில் ஒரு அழகிய பெண் பிள்ளையையும் அவளது விளையாட்டுத் துணை யாகிய ஒரு பூனைக் குட்டியையும் மறைத்து வைத்திருக்கிறீகள். அவர்களையும் இறக்கினால் கப்பல் நகரும் என்கிறார்.

பெண்பிள்ளையும் பூனைக்குட்டியும் இறக்கப்படுகின்றன. கப்பலில் இவர்களுடன் காணப்பட்ட இரண்டு பாம்புகளும் இறங்குகின்றன. அப் பகுதி மக்களைக் காக்கும் எம் பெருமான் ஐந்துதலை நாகமாக காட்சி கொடுக்கிறார்.

அச்சத்தாலும், ஆனந்தத்தாலும் வீழ்ந்து வணங்குகிறார்கள் நாகர்பதிவாழ் மக்களை இறக்கியதும் கப்பல் நகரத் தொடங்கியது. இதனால் நாகேஸ்வரப் பெருமானை சிறை மீட்டவனே என்று கூறி எமது மக்கள் வணங்குவதும் உண்டு. ஐந்துதலை நாகபாம்பாக காட்சிகொடுத்த எம் பெருமான் கவுத்தந்துறையில் இருந்து தற்போது நாக தம்பிரான் கோயில் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாா்.

கவுத்தந் துறையிலிருந்து எம்பெருமான் வந்தபாதையை எம்மவர் நாகம் சரிந்த வாய்கால் என்று அழைக்கின்றனர். கவுத்தந்துறையில் இருந்து எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் இடம் வரை கோயிலின் பின்புறமாக இப்பொழுதும் இவ்விடம் பள்ளமாக இருப்பதைக் காணலாம் எனக் குறிப்பிடுகிறார்கள்.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் படையினா் இந் நாக தம்பிரானை பெரிதும் வழிபட்டதாகவும் மிகுந்த பக்தியுடன் காணப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றனா். நே.நிருசாந்த்





# மாறிவரும் உலகும் மாறாத மனிதர்களும்



யாழ்ப்பாண வரலாற்று பாரம் பரியத்தில் சடங்கு முறைகளில் மாற்றங்கள் தழுவிச்சென்றாலும் இன்றும் சில முறைமைகள் பேணப்பட்டே வருகின்றன. அந்த வகையில் வெளிப் படாமல் கிராமத்தினுள்ளேயே முடங்கி காணப்படும் சடங்கு முறைகளில் ஒன்று வேள்வி.

இவ் வேள்வி சடங்கு முறை வரலாற்றின் முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல்வேறுபட்ட கிராமங்களில் காணப்படுகின்றன.
இவ் வேள்விகள் கிராமங்களில் காணப்படும் காவல் தெய்வமான வைரவர், அம்மன், ஐயனார் போன்றோரை குளிர்ச்சிப்படுத்தும் நோக்கோடு செய்யப்பட்டு வருகின்றன.


வேள்விகள் என்பது கிராமிய தெய் வங்களுக்கு பொங்கல் வைத்தல், மிருகங்களை பலி கொடுத்தல் என் பதை காட்டுகின்றது. வேள்வி என்பது நினைவுக்கு வருவன் அல்வாய் வெள்ளிருவை கவுணாவத்தை பிரதேசங்கள் கவுணாவத்தை வைரவர் கோயில் நிகழ்வில் கலந்து கொண்டவர்களிடம் வேள்விக் கிடாயின் வளர்ப்பு மறை பற்றி கேட்ட போது

எங்கடை கிராமத்தைப் பொறுத்த மட்டில் இந்த கிடாய் ஆடுகள் வேள்விக்கு கொண்டு வாறது பெரிய விஷயம். கோயிலுக்கு நேர்த்திக்காகவே சின்ன குட்டியிலை இருந்து வளர்ப்பம். இது ஒரு போட்டியும் கூட. ஏனெண் டால் இங்கை கொண்டாற கிடாய் களிலை யாரின்ட கிடாய் பெரிய கிடாய், சதைப்பிடிப்பானது, கட்டு மஸ்தானது என்றும் யாரின்ட அதிக விலை போகுது என்றும் போட்டி இருக்கு".


"அதனாலை வளர்க்கேக்க நல்ல சாப்பாடு போட்டுத்தான் வளர்ப்பம். இன்னொரு விஷயம் கிடாய் ஆடு நேர்த்திக்கு வளர்க்கிறது. என்கிறது சும்மா விஷயமில்லை ஒரு 6 மாத குட்டியாய் இருக்கும் போதே தாயை விட்டு பிரிச்சு தனியா கட்டிடுவம். ஒரு மறைக்கபட்ட அதாவது வடிவாச் சொல்ற எண்டா வீட்டு முற்றத்து ஒரு மூலையாய் மறைவாய் கொண்டே கட்டுவம்".

"ஏனென்றால் நேர்த்திக்கு போற கிடாய் யாரும் பார்க்க கூடாது அவிட்டு விட கூடாது. அப்பிடி அயலாரின்ட கண்ணிலை பட்டிச் சன்னா. செத்து போடும் என்ற ஒரு நம்பிக்கை. என்ரை கிடாய்க்கும் இப் பிடி நடந்திருக்கு. அதனாலை மறைவா கட்டி யாரும் பார்க்காத மாதிரித்தான் வளர்ப்பம். ஆனால் கட்டி வளர்க்கிறது என்கிறது பெரிய பிரச்சனை. தினமும் குளை வெட்டி தூக்கணும். ஏனென்றால் மாடுகளைப் போலவோ மறியாடுகளைப் போலவோ குளைகளை நிலத்தில் போட்டு சாப்பிட விடேலா. விட்டால் கீழே குனிந்து சாப்பிட கழுத்து சதைப்பிடிப்பு குறைந்திடும். அதனால் குழையை கொட்டிலின் மேல் வளையில் கட்டுவோம். மேலை கட்டினால் எட்டிச்சாப்பிட காலும் வளரும் கழுத் தின்ரை சதைப்பிடிப்பும் கூடும். இதை விட தவிடு புண்ணாக்கும் கொடுப்பம். இப்பிடி வளர்த்து வேள்விக்கு விடுவம்" எனக்கூறி முடித்தார்.





இது பற்றி சந்திர மணியம் என்பவர் கூறும் போது "நல்ல வடிவாய் கிடாய் ஆடுகளை வளர்த்து வேள்வி அன்று காலையிலை எல்லா கிடாயளையும் குளிக்க வைப்பம் பிறகு கொம்புகளை வளைவாய் சணக் கல்லாலை சீவி விட்டு வர்ண பூச்சு அடிப்பம். பிறகு கழுத்திலை மாலை போட்டு மகராஜாவைப் போல பறை மேளம் அடிச்சு வீட்டிலருந்து கூட்டிக் கொண்டு போவம்.



கொண்டு போய் கோவில் வாசல்ல வரிசையாய் கட்டுவம். இப்பிடி எல்லாரிண்ட கிடாயும் வரும். அங்கே வைரவர் கடவுள் ஒருவர் மேல் ஏறு வதாக நம்பிக்கை அவரே வேண்டுதலை ஏற்றுக் கொள்வதா? அல்லது வீட்டுக்கு திருப்பி அனுப்பு வதா என முடிவு செய்வார். அவரிடம் மேலதிக தகவல்களை பெறுங்கள்" எனக் கூறினார்.


வேண்டுதல் பற்றி முடிவெடுப்பதாக கூறும் பாலேந்திரன் என்பவரிடம் கேட்ட போது,
"பிள்ளைகள் இது காலம் காலமாக நடக்கிற சடங்கு இங்கை அதிகமான கிடாய்கள் வரும் எல்லாம் எவ்வளவு தான் கஸ்டப்பட்டு கிடாய் வளர்த்தாலும் கடவுள் விருப் பப்பட்டாலே நேர்த்தி நிறைவேறும். இந்த சடங்கு பற்றி சொல்கிறதென் டால் வேள்வி ஆரம்பமாக எல்லா கிடாய்களையும் கொண்டு வந்து கட்டிடுவாங்க.

பிறகு பூசை ஆரம்பிக்கும். பூசையில படையல் பழம் என்று நிறைய படைப்பம். பறை அடிக்க தொடங்கி பத்து நிமிஷத்திலை வைரவர் கடவுள் என் மேலை ஏறிடுவார். எனக்கு என்ன நடக்கிற எண்டு தெரியா. எனக்கு அல்லது தம்பிக்குத்தான் வைரவர் ஏறுவார். தம்பி பெயர் ஞானகுமார். அவனிலை ஒரு முறை ஏறும் போது பார்த்தன்.

அதை வைத்து சொல்றன் வைரவர் ஏறிற்றார் எண்டா. முதலில் படையலை ஏற்றுக் கொள்வார். பிறகு விபூதியை எடுத்து வேப்பமிலை யையும் கையிலை வைச்சு கொண்டு எந்த கிடாய் குற்றமானது எதை ஏற்றுக் கொள்வது என்று சைகையால் காட்டுவார். ஏற்றுக் கொள்ளப்பட்ட கிடாய் என்றால் கிடாயின்ரை தலையிலை விபூதியாலை அடிச்சு ஏற்பார். குற்றமானது. எண்டால் அதுன்ரை காதிலை பிடிச்சு வெளியிலை அனுப்புவார். இங்கை பெரிய கிடாய் ஒரு அறுபதாயிரம் எழுபதாயிரம் போகும் என்றார். வேள்விக் கிடாய்கள் இரண்டு வருட கிடாய்கள் 40–50 கிலோ வலை காணப்படும். கட்டுமஸ்தான கிடாய்கள் என்றால் 3 வருடம் கூட வளர்ப்போம் அவை ஒரு 50 கிலோ இருக்கும்" என்றார்.

"என்னதான் சாப்பாடு போட்டு வேள்விக் கிடாய்களை வளர்க்கிறோம் நாங்கள்" என பெருமை தட்டிக் கொண்டாலும் என்றோ ஒரு நாள் ஒரே வீச்சில் இவற்றின் உயிர் பறிக்கப்படுகின்றமை தான் ஏற்றுக் கொள்ள முடியாத வேதனை இக் கிடாய்களும் தாங்கள் பலியாகப் போகின்றோம் எனத் தெரியமால் துள்ளி விளையாடும் இவற்றின் வாழ்க்கையும் ஓர் விசித்திரமானது தான்!

எஸ்.ஹம்ஷா



# சென்னையின் மறுபக்கம்


எந்த துறையில் கால் பதித்தவருக்கும் கிடைக்காத வாய்ப்பு ஊடகத்துறையில் கால் பதித்ததால் இவ் வயதிலேயே எமக்கு கிடைத்துள்ளது. அது தான் எம் புத்தாக்கப் பயிற்சிக்கான இந்தியப் பயணம்.



இந்தியா என்றால் எல்லோருக்கும் ஒரு கனவுதான ஏனெனில் அங்குதான் வரலாற்று புகழ் வாய்ந்த இடங் களும் கலைநயம் மிகுந்த சிற்ப வேலைகளால் அமைக்கப் பட்ட ஆலயங்களும் அழகான பெரியகடற்கரை சாலை களும் இயற்கை அழகுடைய அருவிகளும் என ஒரு அழ கான இந்தியாவை மட்டும்தான் எல்லோரும் கனவு கண்டிருப்போம்.

அதில் தவறில்லை காரணம் நாம் அந்ததும் ஊடகங்கள் மூலமும் சினிமா படங்கள் மூலமும் பார்த்ததும் இவற்றைத் தான். நாமும் இவ்வாறான கனவுகளுடன்தான் இந்தியாவில் கால் பதித்தோம். ஆனால் சென்னையில் கால் பதித்த. உடனேயே ஊடகங்களால் மறைக்கப் பட்ட இந்தியாவை தான் கண்டோம். வாழ்வாதார வசதிகள் எதுவுமின்றி வீதி களில் படுத்துறங்கும் மக்களும் குப்பைகளுக்கும் கூவங் களுக்கும் மத்தியில் குடியிருக்கும் மக்களும் என, 21ம் நுற்றாண்டிலும் இப்படி ஒரு வாழ்வா?

அதுவும் தமிழ் நாட்டின் தலைநகராக விளங்கும் சென்னை மாநகரத்தில் இப்படி ஒரு நிலையா?



நாம் இந்தியாவின் மறைக்கப்பட்ட பக்கங்களை பார்வை இடுவதற்காகதான் புத்தாக்கப பயிற்சிக்கு சென்றோம். அங்கு சொல்லித் தீராத சோகங்கள் எம்மை ஆட் கொண்டன. ஒரு காலத்தில் வாணிபம் மேற் கொண்ட இடம் இன்று கூவமாக மாறியுள்ளது. அந்த கூவம் நதிக்கரையோரம் தான் இச் சேரிக்குடியிருப்புக்கள் காணப்படுகின்றது. சென்னை தலைநகர் முழுவதற்குமான கழிவு நீர் தேங்கி நிற்கும் மக்கள் வாழத்தகுதியற்ற பிர தேசத்தில் 1550 குடும்பங்கள் வாழ்கின்றன என்றால் எவ் வளவு பெரிய கொடுமை?

அங்குள்ள மக்கள் தம் பிரதான தொழிலாக மீன் பிடியை வைத்திருப்பதனால் அரசு சிங்கார சென்னையை உரு வாக்கும் நோக்கில் இவர்களை புறநகருக்கு போகும்படி அறிவித்தல் விடுத்த போதும் இவர்களால் வெளியேற முடி யாமல் இருக்கின்றது. போதிய வசதிகள் எதும் காணப் படாத இவர்களது வாழ்வாதாரம் வறுமையின் கோரப்பிடியை வர்ணிப்பதாக இருக்கின்ற போதிலும் இங்குள்ளஇளம் சமுகம் தம்மை கல்வியில் வளர்த்து இருக்கிறது. என்றே சொல்லலாம். ஆனால் படித்தும் என்ன பயன் தம் பண்பாட்டை பற்றி இவர்களோ இவர்களின் பெற்றோர்களோ சற்றும் சிந்திப்பதில்லை. பிள்ளைகளை வைத்துக் கொண்டே மது அருந்துதல் புகைப்பிடித்தல் சீட்டாடுதல் போன்ற தீய பழக்கவழக் கங்களில் ஈடுபடுகின்றனர். இவை எமக்கு புதியதாகவும் அதிர்ச்சி அளிப்பதாகவும் இருந்தது. எம் நாட்டில் பிள்ளை களுக்காக தம் தொழிலையே மாற்றிய பெற்றோர்களும் தம் சூழலையும் பழக்க வழக்கத்தையும் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதிக்காத வகையில் திருத்திக் கொள்ளும் சமுகத்தையும்தான் கண்டிருக்கின்றோம்.

இன்று எம் நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னரும் தம் கலைந்து போன கனவுகளுடன் மீளக்குடியேறிய மக்களில் எத்தனை பேர்தம் வாழ்வில் உயர்ந்திருக்கிறார்கள். தம் சமுகத்தை மாற்றி அமைத்திருக்கிறார்கள் இவர்கள் எல்லாம் யுத்தம் தந்த வடுக்களை மனதில் சுமந்தவராக இருக்கின்ற போதும் தம் பிள்ளைகளுக்காகவும் எதிர்கால சமுகத்திற்கா கவும் தம் மன வேதனையை எல்லாம் மனதில் போட்டு புதைத்துக் கொண்டு வாழநினைக்கிறார்கள். என்றால் தம்மை மாற்றாத இந்தியாவின் சேரிப்புற மக்களை நினைக்கையில் தவறை யார் மீது கூறுவது என்றே எமக்கு புரியவில்லை. இநந்தியாவில் சிங்காரச்சென்னை உருவாகும் போதாவது இச்சேரி வாழ்க்கை இல்லாது போகும் என நம்புகின்றேன்.

எஸ்.ஹம்ஷா



# இனியென்ன தனிமை!



சமாதானப்புறாவே வா என அழைத்த காலம் போய் அபிவிருத்திப்புறாவே வா என்று அழைக்கும் காலம் இது. யுத்தத்தின் வடுக்களை நெஞ்சின் ஓரமாக புதைத்து விட்டு சொந்த நிலத்திற்கு  சந்தோசமாக செல்கிறார்கள் மக்கள். இருபத்தியொரு வருடங்கள். "அப்பப்பா எத்தனை நீண்ட காலம்" என நினைவுப் பெருமூச்செறிகிறார் சாந்தி. தெல்லிப்பளையிலுள்ள கூடத்தார் வைரவர் இவரது குல தெய்வம். இங்கே மீள்குடியேறி வைகாசி விசாகதினத்தில் தன் சொந்தங்களோடு கூடி வைரவருக்கு பொங்கல் படைக்கின்றார் இவர்.

அக்கம்பக்கத்தில் இன்னமும் குடியிருப்பிற்காக மக்கள் வந்து சேரவில்லை. அடர்த்தியான மரங்கள். அந்த இரவு நேரத்தினை தென்றல் இதமாக குளிர்வித்துக் கொண்டிருந்தது. காடொன்றிற்குள் நுழைந்த உணர்வு தான். மின்சாரம் மருந்துக்குக் கூட இல்லாத அந்த குச்சு ஒழுங்கைக்குள் ஜெனரேட்டர் இரையும் சத்தம் மட்டும் பெரி தாக கேட்கிறது. அதனை ஒட்டி சங்கு ஓதும் சத்தம்.

மின்குமிழ்களின் வெளிச்சத்தினையும் தாண்டி அங்கு நின்ற மக்கள் முகங்களில் அப்படி ஒரு பிரகாசம். பூசாரி எனச் சொல்லப்படுபவர் வைரவருக்கு பூசை செய்து கொண்டிருந்தார். வைரவருக்கு முன்பாக படையல் வைக்கப்பட்டிருந்தது. நேரம் ஏழு மணியாக பூசை முடி வடைந்தது. பிரசாதம் பரிமாறி பொங்கல் சாப்பிட்டார்கள். அங்கு நின்றவர்களில் முக்கால்வாசிப்பேர் இன்னமும் அங்கு குடியிருக்க வரவில்லை. போன வருசம் எங்கட இடத்தைப் பார்க்கவென்று விட்ட போது எங்களுக்கு அப்படியொரு சந்தோசம்.

"என் பன்ரெண்டு வயசில இடம்பெயர்ந்து போனாங்கள். இன்னமும் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்குது. இப்ப வீட்டுத்திட்டத்திற்கு பதிந்திருக்குது. வளவை கொஞ்சங் கொஞ்சமாக வந்து துப்பரவு செய்கிறனாங்கள். இருக்க வாறதுக்கு பயமாக இருக்கு. ஆனா வீட்டுத்திட்டம் வந்தவுடனே இங்க வந்திடுவம்" என்கிறார் றணிற்றா.

இங்கு குடியிருக்கும் 38 வயதான தாரகா சொல்கிறார். "நாங்கள் இந்த தை மாதத்தில் குடியிருக்க வந்தம். வந்த புதுசில ஒரே பயமாக இருக்கும். இப்ப ஏதோ பரவாயில்லை. வீட்டைச் சுற்றி பற்றை தான் மண்டிக் கிடக்குது. ஆடு, மாடு,கோழி என தந்திருக்கினம். மழை வந்தால் என்ன செய்யிறதென்று தான் புரியேல்லை"  என ஆதங்கப்படுகிறார்

யூனியன் கல்லூரிக்கு அருகிலுள்ள சிறு ஒழுங்கைக்குள்ளே தான் இந்த இடம் இருக்கிறது. ஒழுங்கையின் இருபறமும் இப்பில் மரங்கள் முளைத்திருக்கிறன. கோவிலின் பழைய கட்டிடம் கூரை இல்லாமல் அப்படியே இருக்கிறது. அதனருகே சிறுகொட்டில், தற்போதைக்கு அங்கு தான் கூடத்தார் வைரவர் வாசம் செய்கிறார்.

அடுத்த பொங்கலுக்காக கொஞ்சப்பேர் மோட்டார் சைக்கிள் களில் வந்து இறங்கினார்கள். பொங்குவதற்காக ஆறு பானைகள் வைத்தார்கள். அந்த நெருப்புச் சுவாலைகளைப் பார்க்க நிலாவும் உச்சத்திற்கு வந்தான். மறுபடியும் படையல்: பூஜை. தாமரை இலைகளில் பொங்கல் பரிமாறப் பட்டது. வைரவர் பெருமான் பன்னிரண்டு ஆண்டு காலத்திற்கும் அதிக காலங்களை தனியே கழித்திருக்கிறார். ஆனால் இப்போது இந்த பன்னிரண்டு மணிச சாம வேளையில் சொந்தப்பிள்ளைகளோடு படையல் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

மு.கௌசிகா



மனிதன் கிரகம் விட்டு கிரகம் தாண்டி இக்காலப்பகுதியில் இருபத்தொராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருந்தாலும் தொழில் நுட்பம் ஆரம்பகட்ட தடம்பதித்தலைவிட இக்காலப்பகுதியில் உச்சத்தை கண்டுள்ளது. இருப்பினும் எம்நாட்டு பாரம்பரியம் பண்பாடு கலாசாரம் இன்றும் இருந்து வருகின்றது. சில பொருட்கள் அடுத்தடுத்த படிகளை தாண்டி சென்றாலும் முதல்படியை நேசத்துக்குரிய ஒன்றாகவே கருதி பேணிவருகிறார்கள். அந்தவகையில் மட்பாண்ட கைத்தொழில் இன்று தொழில் நுட்பத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் குயவனின் கைவண்ணம் இருக்கிறது.



மட்பாண்டம் என்பது பொதுவாக மண்ணால் செய்யப்பட்ட பொருட்களைக்குறிக்கும். மிகப்பழங்காலத்திலேயே மட்பாண்டங்கள் செய்யும் தொழில்நுட்பங்கள் கண்டுறியப்பட்டுள்ளன.மட்பாண்டம் செய்வது உலகின் பல பகுதிகளிலும் மிகவும் பழமை வாய்ந்த தொழிலில் இருந்து வருகிறது. இத்தொழில் தமிழ் மொழி குயத்தொழில் என்றும் மட்பாண்டம் செய்பவர் குயவர் என்றும் அழைக்கப்பட்டனர்.

# மறைந்து போகும் கையின் கலை வண்ணம் அழிவடையாமல் காப்பது எப்படி..?

யாழ்ப்பாண வாரலாற்று பகுதிகளிலே மட்பாண்டங்கள் பொருமளவுக்கு பயன்படுத்தப்பட்டு வந்து காணப்பட்டது. ஆரம்பகால கட்டங்களில் பரவலாக காணப்பட்ட போதும்தற்பொழுது ஒரு சில பகுதிகளிலேயே மேற்கொள்ளப படுகிறது. துற்போது இம் மட்பாண்டம் அழிவடையமால் பாதுகாப்பதோடு இக்கலை அழிவடையாமல் இன்றும் யாழ்ப்பாண மாவட்ட வடமாரட்சி பிரதேசமான துன்னாலை பகுதியிலும் உடுப்பிட்டி பிரதேசத்திலும் மேலும் புத்தூர் அரால் சங்கானை பகுதிகளிலும் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காலச் சுழற்சியில் அலுமினிய பொருட்கள் ஆதிக்கம் தலைதூக்க தொடங்கிய போது சிறு மாற்றம் நம்மிடம் ஏற்பட்டது. பின்னர் அது பரிணாம வளர்ச்சி பெற்று பெரும் பணம் படைத்தவர்களின் இல்லங்களில் மின்னும் வெள்ளி பொருட்களுக்கு இணையாக சில்வர் பொருட்கள் 1985 வாக்கில் வேகமாக வளர்ச்சி பெற்று கிராமத்து ஓலை குடிசைக்குள்ளும் ஓடிவந்து புகுந்தது.

கை வண்ணம் என்றால் அது இவனுக்கே பறை சாற்றும் தன் கைகளால் மண்ணிலிருந்து ஏழு வகையான பனையினை செய்பவன்

இத் தொழிலை இன்றும் அழியவிடாது பாதுகாத்துக் கொண்டிருக்கும் க.சண்முகம் அவர்களிடம் செவ்வி கண்ட போது அவர்,



"தற்போது இத் தொழில் அழிவடைந்த போதும் புரணமாக அழிவடைந்து விட்டது எனக்கூறி விட முடியாது. ஏனெனில் இன்றும் இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்ப புது வருசத்துக்கு பெருமளவில மண்பானை விற்று இருக்காம். மேலும் கார்த்திகை விளக்கீடு வைபவ காலங்களில் பெருமளவு சுட்டிகள் விற்பனை யாகின்றன இதனாலை எங்கட தொழில் அழிவடைந்து விட்டது என்று சொல்லி விட முடியாது. எண்டாலும் குறைவு தான் எனக்குறிப்பிட்டார்.

மேலும் பனை ஒன்றை தயாரிக்கும் முறை பற்றி குறிப்பிட்டார். களிமண்ணே எம் பிரதேசத்துக்கு இம்மட்பாண்டம் செய்வதற்கு முதலுதாரம் அது இல்லாவிட்டால் நாங்க இந்த தொழிலைவிட வேண்டியாதுதான் என்றார். மேலும் தெரிவிக்கும் போது பானை தாயரிக்க களிமண்ணை எடுத்து தண்ணிரில் கலந்து சேரும் வரை அது இரண்டையும் கலக்க அதற்கு மேல் எறி காலால் உலக்கி உலக்கி கலக்க வேண்டும். பின் கலந்து மண்ணை எடுத்து சக்கரத்தில் வைத்து கையால் தட்டி பிசைந்து லேசாக்கல் வேண்டும் அப்பத் தான் வளைச்சு உருவத்துக்கு கொண்டு வரலாம் என்றார். பின் சக்கரத்தை சுத்தி பானையை படிப்படியாக வனைந்து அதை அப்பிடியே நூலால் வெட்டி சக்கரத்தில் இருந்து எடுத்து வெயிலை காய வைப்பம்".

பிறகு காய்ந்த பின் கொஞ்சம் வெறும் மண் தடவி சூளையில் இட்டு உயர்ந்த வெப்ப நிலைக்கு சூடாக்கி வெளிலை எடுப்பம். இவ்வாறு சூடாக்குவதன் மூலம் களிமண் இறுகுதல் பலம்கூடுதல் வடிவம் உறுதியாதல் போன்ற நிரந்தரமான மாற்றங்கள் ஏற்படும் பின் அதை சாம்பலை மினுக்கி விட்டு விற்போம். மட்பாண்டம் செய்வதற்கு பயன்படும் களிமண் இடத்துக்கிடம் வேறுபாடாக அமைவதனால் அவ்விடங்களில் செய்யப்படும் மட்பாண்டங்களும் தனித்துவமான ஒவ்வொரு இயல்பு இருக்கு.



90 க்கு முன்னம் நூற்றுக்கணக்கிலை செய்வம். இப்பெல்லாம் எங்கை அப்பிடி மாதத்துக்குத்தான் வேலை வரும். முந்தி எங்களுக்கென சங்கம் இருந்திச்சு சட்டி பானைச்சங்கம் என்று அதிலை வைத்துதான் எல்லாம் விற்கிறது. பிறகு போக போக தொழில் குறைய மூடிற்றாங்க. இப்ப மண்ணும் ஒரு பிரச்சனைதான். முந்தி இந்த கிராமத்துல எங்க பார்த்தாலும் செம்மண் சூளையாத்தான் இருக்கும் அந்தளவுக்கு தொழில் நடந்திச்சு. வேறை மட்பண்டத்துக்கெண்டு தனி இடம் சமையலுக்கு இதிலை சமைக்க ஆசைப் படுறவங்க இப்பவும் நிறைய பேர்.

இத்தொழிலை நாற்பது வருடங்களுக்கு மேலாக செய்து வருகிறோம். ஆரம்ப காலங்களில் இப்பகுதியிலே சு'ளை அமைத்து, மண்பாண்ட பொருள்கள் செய்து, விற்பனை செய்து வந்தோம். சில்வர், சுதேசி பாத்திரங்கள் என, காலம் மாறிப் போனாலும் மண் பானையில் சோறு வைத்தும், மண் சட்டியில் குழம்பு வைத்தும் சாப்பிட்டால் உடல் நலத்திற்கு நல்லது. இது இன்றைய சமுதாயத்தினரிடம் குறைந்து போகிறது. இருப்பினும் பொங்கலின் போது மண் பானை, மண் சட்டிகளின் வியாபாரம் சு'டுபிடித்துவிடும். எங்களுக்கு முன்னம் சங்கம் அமைக்கப்பட்டு இருந்தும், கடை வசதி செய்து தரப்படவில்லை. இதனால் வீட்டு வாசலுக்கு முன்பு போட்டு விற்கிறோம். பரம்பரையாக மண் பாண்டங்கள் செய்யும் தொழிலை செய்து வருகிறோம் பலர் இத்தொழிலின் மூலப்பொருளிலான களிமண் கிடைப்பதில் பிரச்னை உள்ளதால், இத்தொழிலை விட்டு விலகி விடுகின்றானர் இதெல்லாம் எங்களுக்கு பிரச்சனை தான்.



முன்னம் இப்பகுதிகளில் உள்ள குளங்களில் களிமண் எடுத்து தொழிலில் ஈடுபட்டோம். சமீப காலமாக மூலப் பொருளான களிமண் எடுக்கக் கூடாது என, பொலீஸ் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினர் தடை விதிக்கின்றனர். எனினும் அனுமதி வாங்கி ஓரளவிற்கு இத்தொழிலில் ஈடுபடுகிறோம். கோடை காலத்தில் மட்டுமே குளங்களில் களிமண் எடுக்க முடியும் என்பதால், இக்காலங்களில் தொடர்ந்து களிமண் எடுக்க எங்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்''.

ஏற்கனவே இந்த தொழிலை வெறுக்கும் இளைய தலைமுறையினர், களிமண் பிரச்சனையால் மொத்தமாக இத்தொழிலில் இருந்து விலக அதிக வாய்ப்புள்ளது. பகுதிவாரியாக இத்தொழில் செய்பவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, அவர்களுக்கு குறிப்பிட்ட இடத்தில் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்ய, வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போது தான் எம் மரபு அழியாமல் பாதுகாக்கப்படும்.

-நே.நிருசாந்த்





ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய நான்காம் அணி இதழியல் டிப்ளோமா மாணவர்கள் உள்ளகப் பயிற்சிக்காக 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியா சென்றிருந்தனர். அப்போது கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கொன்றில் பங்குகொண்டனர். அதன்பின்னர் பல்கலைக் கழகமுன்றலில் அமைந்துள்ள பாரதியார் சிலை முன்பாக சென்னைப் பல்கலைக்கழக மற்றும் பாரதியார் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து எடுத்துக் கொண்ட படம்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Print By : Noble printers. 0212220386